சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

28



ஆசிரியர்: மு.தயாளன்

இதழ் 28 கார்த்திகை 2022 £4.00

## வளர்ந்த , வளரும் படைப்பாளிகளுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்காளர்கள்



கமலினி கதிர்
பக்கம் 3
இலங்கை



செ. ஜனனு ஜனன் ஷந்த்
பக்கம் 5
இலங்கை



சம்பூர் சமரன்
பக்கம் 10
இலங்கை



நிலாவளியூர் கெஜ-தர்மா
பக்கம் 18
இலங்கை



ஏ பீர் முகம்மது
பக்கம் 20
இலங்கை



அ. யேசுராசா
பக்கம் 23
இலங்கை



தீபதிலகை
பக்கம் 26
இலங்கை



ஏம் சீ ஏ பரீட்
பக்கம் 29
இலங்கை



பேராசிரியர் யோகராசா
பக்கம் 31
இலங்கை


20 % கழிவு

## SKM BOOKS FOR SALE

20 % கழிவு



300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 200 ரூபா 300 ரூபா 350 ரூபா



200 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 400 ரூபா

எனது எல்லாப்புத்தகங்களும்
சிறுகதை மஞ்சரிகளும்
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

India 400 Rs
London £5 Can/Ame $10
Europe 10 Euro
*மேற்குறிப்பிட்ட விலைகளிலிருந்து 20% கழிவில் பெறலாம்*

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை skmbooks50@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்


**வாசிப்பதனால் மனிதன் பூரண மனிதனாகிறான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. KUGAN
72, 2nd LANE
ANANDAPURI
TRINCO
0771960160



# பாவப்பட்ட இலங்கையின் துயரம்....

அரசியல் என்பது இலங்கையில் சிறுபிள்ளை விளையாட்டாகப் போய்விட்டது. அனுபவம் வாய்ந்த அரசியலாளர்கள் என்று கருதப்பட்டவர்கள் சடுகுடு விளையாடிக் கொண்டிருக்கும் களமாகப் போய்விட்டது இலங்கை.

வாழ்க்கைச் செலவு உச்சக்கட்டத்திற்குப் போய்விட்டது. மக்கள் செய்வதறியாது தவித்துப் போயுள்ளனர். இதனைத் தீர்த்துவைக்க வேண்டிய அரச தலைவர்கள் கதிரையைவிட்டு எழும்பினால் திரும்ப அந்த இடம் கிடைக்காதென்ற எண்ணத்தில் கதிரையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி வசதிபடைத்த உலக நாடுகள் இலங்கையோடு ஆடுபுலியாட்டம் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

வடக்குக் கிழக்கிலுள்ள உள்ள தமிழர்கள் வெளிநாட்டில் தமது உறவினர்களிடமிருந்து பணமெடுத்து தமது வாழ்க்கையைப் படாடோபமாக எவ்வித கவலையுமில்லாமல் வாழ்ந்து கொண்டு நயந்தாராவுக்குப் பிறந்த குழந்தைபற்றி பட்டிமன்றம் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் ஆய்வாளர்கள் தங்கள் அறிவுத்திறனைக் கொண்டு ஆய்வுகளைப் பொறிகளாக பத்திரிகைகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

துறைமுகங்களில் எண்ணெய்க் கப்பல்கள் வந்து காத்துக் கொண்டிருக்கின்றன. அரசுக்குப் பணம் செலுத்த வக்கில்லாததால் அந்தக் கப்பல்கள் துறைமுகத்தில் தரித்து நிற்பதற்காகக் கட்டணம் இலட்சக்கணக்கில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பணம் இல்லையென்பது முன்பே தெரிந்திருந்தும் கப்பல்களை ஏன் வரவழைக்கிறார்கள் என்பதன் பின்னணி புரியவேயில்லை.

ஒரு இறாத்தல் பாணின் விலைக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு இவைபற்றி விசாரிக்க ஏது நேரம்? அப்படி அறிவுள்ள யாரும் கேட்டால் உடனே அவர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்குள் அடைக்கப்பட்டுவிடுகிறார்கள். குரல் எழுந்திசையெல்லாம் குண்டாந்தடியும் கண்ணீர்ப் புகையும் சமூகமளித்து நாசம் புரிகின்றன.

அரச தலைவருக்குத் தெரியும் அரசு கலைக்கப்பட்டுத் தேர்தல் நடந்தால் இப்படி ஒரு வாய்ப்பு தனக்குக் கிடைக்கவே கிடைக்காது என்பது. ஆதலால் என்ன விலைகொடுத்தாயினும் இந்த இரு வருடங்களும் பதவியோடு நகரவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். இதனை மாற்ற யாராலும் முடியாது. கலைக்கப்பட்டவர்கள் வெளியிலிருந்து ஆள்கிறார்கள்.

அரச தலைவரைத் தங்கள் வாக்குகளால் காப்பாற்றிக் கொண்டிருக்கும் மொட்டுக் கட்சியினரும் தங்களுக்குத் தேவையான யாவற்றையும் சுலபமாக வீட்டிலிருந்தே பெற்றுக் கும்மாளமடித்துக் கொண்டிருக்கின்றனர்.

மக்கள் உணவின்மையால் சக்தி இழந்து செய்வதறியாமல் வாடி விழுந்து கொண்டிருக்கிறனர். இதற்கிடையில் தமிழ் அரசியலாளர்கள் ஆளுக்காள் வசைபாடி தமிழர் உரிமைபற்றி வாய்கிழியக் கத்திக் கொண்டிருக்கின்றனர்.

தங்களுக்குள் தாங்களே அகங்கார வெறி கொண்டு கத்திக் கூக்குரலிட்டவாறு வாள்களால் ஆளையாள் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பாவப்பட்ட இந்த இலங்கை பரிதாபமாக நடுங்கிக் கொண்டிருக்கிறது.

**மு. தயாளன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்...


**1** **பாவப்பட்ட இலங்கையின் துயரம்**
ஆசிரிய தலையங்கம்

**2** **உள்ளடக்கம்**

**3** **நசுங்கிப்போகும் உணர்வுகள்**
கமலினி கதிர்

**5** **அதிர்வலைகள்**
செ.ஜனனு ஜனன் ஷந்த்

**10** **எதிர்பாராதது**
சம்பூர் சமரன்

**14** **ஜன்னல்**
மனால்

**15** **கரும்பலகை (தொடர்கதை)**
மு.தயாளன்

**18** **தூவானம்**
நிலாவெளியூர் கெஜ-தர்மா

**20** **தைலாப்பெட்டி**
ஏ.பி. முகம்மது

**23** **வெக்கங்கெட்டவர்கள் (சிறப்புச் சிறுகதை)**
அ.யேசுராசா

**26** **முடிந்த வாழ்க்கை மீள்வதில்லை**
தீபதிலகை

**29** **மிஸ் - யூ - டடா**
எம் சீ யே பரீட்

**29** **மஞ்சரி ஒரு பார்வை (26)**
பேராசிரியர் செ. யோகராசா

**29** **சிறுகதை எழுதுவது எப்படி?** (தொடர் கட்டுரை)
மு. தயாளன்


**சிறுகதை மஞ்சரி 27 இன் சிறந்த இருகதைகள் சிறுகதைகள்**

1. கெற்றப்போல் - செந்தூரன் கனகரத்தினம்
2. பங்கர் - நிலவந்தன்

## எழுத்தாளர்கள் கவனத்திற்கு:

*மஞ்சரியில் எழுதும் இலங்கையில் வதியும் எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக 1000 ரூபா தரப்படும் என்று கூறியுள்ளோம். இது கிடைக்காதவர்கள் தயவுசெய்து உங்கள் வங்கிக் கணக்கு விபரங்களை எமக்கு அறியத்தரவும். ஒவ்வொரு தடவை நீங்கள் கதையை அனுப்பும்போதும் இந்த விபரங்கள் கதையுடன் இணைக்கப்படவேண்டும். (ஆ-ர்)*

**அன்பான வேண்டுகோள்.**

*அன்பு நிறை எழுத்தாளர்களே உங்கள் படைப்புகளை ஆகக்குறைந்தது மூன்றுதரம் வாசித்துத் திருத்தி அனுப்புங்கள்.*



**மன்னிக்க வேண்டுகிறேன்!**
**27 ஆவது மஞ்சரியில் 'கெற்றப்போல்' எனும் சிறுகதையை எழுதியவர் பெயரும் படமும் தவறாகப் பதிவாகியுள்ளது. அதை எழுதியவர் க. செந்தூரன். மன்னிக்கவும்**


**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர், ஓவியர் கைலாச நாதன் ஓவியை கோகிலா டயாளினி


**1000 பேரை இணைப்போம்......**
தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


**அட்டை வடிவமைப்பு:** ரமணன் நற்குணதயாளன்
**அட்டைப்படம் :** Ayshnavi Vinojan
**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் , R. கோகிலா டயாளினி

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி. மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா
**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649

**சந்தா விபரம்:**
**Srilanka:**900Rs/Year
Bank detail : Mrs Sasikala Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நசுங்கிப் போகும் உணர்வுகள்

கமலினி கதிர்

தூங்கியெழுந்த நான் நேரமாகிவிட்டதோ என்று பரபரப்புடன் எழுந்து மனைவி மேகலா எழுந்துவிட்டாளா என்று பார்த்தேன். இரவு நீண்டநேரம் நித்திரை வராமல் மேகலாவைப் பற்றியே யோசித்து கொண்டிருந்ததில் விடியும்போதுதான் நித்திரை வந்தது. விடிந்ததே தெரியவில்லை. சமீபத்தில் அவளுக்கு நடந்த சத்திரசிகிச்சையின் பின் வித்தியாசமாக நடக்கத் தொடங்கியிருந்தாள்.

"சில வேளை மருந்துகள் மனதை தடுமாறச் செய்யும். நாட்கள் செல்லச்செல்ல சரியாயிடும" என்றார் வைத்தியர். ஆனால் நாட்கள் நகர்ந்ததே தவிர அவளது நடைமுறையில் மாற்றம் ஏற்படவேயில்லை. வைத்த பொருளை எடுக்க முடியாமல் தடுமாறுவதில் ஆரம்பித்து உணவு உண்டபின்பும் திரும்பவும் உண்ணத் தயாராவதைக் கண்ட பின்பு இப்பதானே சாப்பிட்டீர். ஏன் சாப்பாடு காணாதோ? நான் கேட்கவும் நான் இன்னும் சாப்பிடவேயில்லையே மேகலா சொன்ன போது எனக்கு திக்கென்றிருந்தது. அதன்பின் மேகலாவைக் கவனிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தேன்.



கழுவிய பாத்திரங்களை மீண்டும் மீண்டும் கழுவுவதும், படிக்காமல் சும்மா புத்தகத்தை வெறுமனே வாசிப்பதுபோல் வைத்திருப்பதும் எனக்கு நெருடலாகவே இருந்தது. ஒருநாள் கடைக்குச் சென்றவள் நெடுநேரமாக வராததால் போன் பண்ணிப் பார்த்தும் எடுக்கவில்லை. கொஞ்ச நேரம் பார்த்து விட்டு தேடிப் போய் பார்த்தபோது வீதியில் ஓரிடத்தில் நிற்பது தெரிந்தது. ஏன்நிற்கிறீர்? கேட்கவும்...எப்படி வாறதென்று தெரியவில்லை. கனதூரம் நடந்திட்டன். வீட்டைக் காணேலை. அதுதான் இதிலேயே நின்றிட்டன்... பயந்தபடியே கூறினாள்.

"சரி வாரும். நான் தான் வந்திட்டேனே" என்று அழைத்து வந்த பிறகு வெளியில் அனுப்புவதைத் தவிர்த்தேன். நான் எழுபத்திரண்டு வயதிலும் நினைவாற்றலுடன் இருக்கிறேனே. என்னை விட ஐந்து வயது குறைந்த அவளுக்கு இப்போதே நினைவு குறைந்து கொண்டு வருகிறதா? வருவதை ஏற்க வேண்டுமென்று புத்தி சொன்னாலும் இதையெல்லாம் எப்படித் தாண்டப் போகிறோமென்ற கவலை என்னைத் தொற்றிக் கொண்டது. வைத்தியரிடம் அழைத்துச்சென்றதில் கொஞ்சம் கொஞ்சமாக அவள் நினைவுப் பிறழ்தல் நோயை நோக்கிச் சென்றுகொண்டிருப்பது தெரிந்து நான் உடைந்து போனேன்.

பிள்ளைகள் சொன்னார்கள் நெடுகக் கதையுங்கோ அப்பா கதைக்கவே பிடிக்காதவள் போல்....அலட்டாமல் கொஞ்சம் இருக்கிறீங்களா?சும்மா தொண தொணத்துக் கொண்டு என்று சொல்பவளுடன் என்னத்தைக் கதைக்க.ஏதோ என்னை ஞாபகம் இருக்கிறதே.

அதுவே போதும்.... திருப்திப்பட்டுக் கொண்டேன்.தன் பேரப்பிள்ளைகளைக் கூட அடையாளம் காணச் சிரமப்பட்டாள். பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் வந்திருக்கிறார்கள் எனக் கூறும்போது மகள் வெகுவாகக் கவலைப் பட்டாள். தன் மகளையும், மகனையும் மட்டும் ஞாபகத்தில் வைத்திருந்தாள் மேகலா. முன்பு சதா புத்தகங்களுடன் உறவாடி மகிழ்ந்தவள் இப்போது புத்தகங்களை ஏறிட்டுப் பார்க்கவும் விருப்பம் இல்லாமல் இருப்பதைப் பார்க்க மனசு வலித்தது. எந்த நேரமும் எதையாவது செய்து கொண்டு சிவபுராணத்தை முணு முணுத்துக் கொண்டு வளைய வந்த மேகலாவிற்கு இப்படி ஒரு நிலை வருமென்று கனவில் கூட நான் நினைக்கவில்லை.

"மேகலா! உமக்குத்தான் புத்தகங்கள் பிடிக்குமே. நான் வாசித்துக் காட்டட்டுமா?" நான் கேட்க "உங்களுக்கு விருப்பமென்றால் வாசியுங்கோ. என்னையேன் கேட்கிறீங்க?" அவள் பதிலுக்குப் பின் கேட்கத் தோன்றவில்லை. மூளையை ஆரோக்கியமாக வைத்திருப்பவர்களுக்கு இந்த ஞாபகமறதி நோய் வரமாட்டாதென்று எப்போதோ வாசித்த ஞாபகம் எனக்கு. ஆனால் மேகலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலினி கதிர்

சதா வாசிப்பதும் இறை வழிபாடும், தேவாரங்கள், மந்திரங்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவளுக்கு ஏன் இப்படி? மேகலாவுக்கு இப்படி வந்தபிறகு நான் இது பற்றி நிறைய வாசிக்கின்றேன். ஞாபக மறதி, நினைவுப்பிறழ்வு, டிமென்ஷியா, அல்சைமர், அமினீசியா விதம்விதமான பெயர்களைச் சூட்டிக் கொண்டு அந்த நோய் வலம் வந்து கொண்டிருந்தது. இதைத் தான் முந்தி அறளை பெயருது கிழங்களுக்கு என்று சொல்வார்கள் போலும். மூளைக்கு இரத்தம் போறது குறைகிறதால்தான் இது வருகிறதென்று என் நண்பன் சொன்னான்.

மேகலாவின் அக்கா வந்து தன் தங்கையைப் பார்த்து மிகவும் கவலைப்பட்டா. அக்காவைப் பார்த்ததும் ஓடிச்சென்று கட்டிப் பிடித்து... "இவவை எனக்கு நல்லாய் தெரியும். பெயர் ஞாபகம் வருகுதில்லை. ஆனால் கனகாலம் இவவுடன் பழகியிருக்கிறேன் என்று மகிழ்ச்சியோடு கதைத்தா." அக்காவும் பெயர் தெரியாவிட்டால் பரவாயில்லை. உம்மடை அக்கா மாலாவை நினைவிருக்கா..என்று கேட்டா....இதென்ன இப்பிடிக் கேட்கிறீங்க? அவவை மறப்பேனா? நாங்க ஒன்றாய் ஸ்கூல் போனதும் விளையாடினதும் எப்படி மறப்பேன்.. என்று பழைய ஞாபங்களை மீட்டிப் பேசினா. ஆனால் தன்னுடன் கதைப்பது அந்த அக்கா மாலாதான் என்பது மட்டும் தெரியவில்லை. ஒருக்கா அக்காவைப் பார்க்க ஆசையாக இருக்கு. கூட்டி வருவீங்களா என்று அக்காவையே கேட்டா. கண்களில் நீர் மல்க..நான் தான் உம்மட அக்கா மாலா. நல்லாய் நினைச்சுப் பாரும்..அக்கா சொல்லி முடிக்கவும்..எனக்கென்ன என்ரை அக்காவைத் தெரியாதா? அக்காவின் சாயலில் இருக்கிறவை எல்லாம் அக்காவாயிட முடியுமா?.. தன் நினைவில் உறுதியாக இருந்தா மேகலா. மாலாதான் தன் அக்கா என்பதை ஏற்கவேயில்லை.

நாட்கள் விரைய கொஞ்சம் கொஞ்சமாக என்னையும் மறக்கத் தொடங்கி விட்டாள். என்னால் அதைத் தாங்க முடியவில்லை. தற்போது என்னுடன் படுப்பதற்கு விரும்பாமல் தனியறையில் தூங்கத் தொடங்கினாள்.

"மேகலா! நான் உம்முடைய ராஜன். பிள்ளைகளின் அப்பா" உரிமையுடன் அறைக்குள் சென்ற என்னை உயிர்ப்பு இல்லாமல் வெறுமையாகப் பார்த்தாள்.

"வாரும் மேகலா! வெளியில் போய் விட்டு வருவோம்". ஆதரவுடன் பற்றிய கையை உதறிவிட்டாள். "நீங்க யார்? என்னைத் தொடாதீங்க." அருவருப்புடன் என்னைப் பார்த்தாள். "உம்முடைய கணவன். வாரும்." காதிலே விழாததுபோல் கனவில் நடப்பதுபோல் நடந்து சென்றாள். தன் நினைவு இழந்த நிலையிலும் ஒரு ஆண் தன்னைத் தொடக்கூடாதென்ற நினைவு என்னை ஆச்சரியப்பட வைத்தது. பெண்மைக்கு சக்தி அதிகம் போலும். வைத்தியர் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. "அவவுக்கு பிடிக்காததை திணிக்க வேண்டாம். அவ தனக்குள்ளே ஒரு உலகில் வாழுகின்றா. உங்களால் பராமரிக்க முடியாத நிலை வந்தால் முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடுவோம்." என்னால் அதை ஜீரணிக்கவே முடியவில்லை.

"அப்பா! நடப்பதை ஏற்றுக்கொள்ளுங்கோ. அம்மா மறக்கின்றா என்றால் ஏன் அப்படி என்று குழம்பாதேங்கோ. இதுதான் உண்மை. நாங்க ஏற்றுக்கொள்ளத்தான் வேணும். எங்களையுந்தான் மறந்து கொண்டு வாறா. அதற்காக புலம்புவதில் ஒரு பயனுமில்லை. அவவின் அன்பை எப்படி கொண்டாடினோமோ அப்படியே அவவின் மறதியென்ற நோயையும் ஏற்றுக்கொள்வோம்." பிள்ளைகள் கூறுவது சரி என்றாலும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்தேன். எங்கள் நாற்பத்தைந்து வருட மண வாழ்க்கை, அதில் காதலும், ஊடலும், சின்னச் சின்ன வாக்குவாதங்களும், பொருளாதாரத் தளும்பல்களை இருவருமே சமன்படுத்தியதென்று எவ்வளவு நிகழ்வுகளைக் கடந்து வந்திருக்கின்றோம். என் மனதில் எண்ணங்கள் ஓடிக்கொண்டே இருக்கும். அவளது நினைவுகளை மீட்க எத்தனையோ முயற்சிகள் செய்து தோற்று விட்டேன். இதுதான் இந்துசமயம் சொல்கிற கர்மாவோ?

மழை எப்படி ஒருவர் கட்டுப்பாட்டில் இல்லையோ அப்படித்தான் என் மனமும் கட்டுப்பாடில்லாமல் அலக்கழிந்தது. மனைவியின் நினைவுகள் அலைஅலையாக வந்து மனதிலே நடனமாட நான் அதற்குள் என்னைத் தொலைத்துக் கொண்டிருந்தேன். மேகலாவின் மனதிலோ எந்தவிதமான எண்ண அலைகளுமின்றி கூட்டுப்புழு தன்னைச் சுற்றி கூடமைத்து வாழ்வதுபோல் அமைதியாக இருந்தாள். அம்மாவை இனி நீங்க பராமரிப்பது கஷ்டமப்பா. குளிக்க மற்றும் அவவின் வேலைகளைச் செய்ய ஒத்துழைப்பு தாரா இல்லை. உங்களுக்கும் இயலாமை வருகுது. வருவதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எங்களுக்கெல்லாம் சொல்வீங்க. இப்ப ஏன் தடுமாறுறீங்க? மகள் சொல்வது உண்மைதான். ஏற்கத்தான் மனம் தயங்குது. மேகலாவை முதியோர் இல்லத்திற்கு அழைத்துச்செல்ல வந்து விட்டார்கள். அவர்கள் வாகனத்தில் மேகலா தனிய வெளிக்கிட்டது என்னால் தாங்க முடியவில்லை. எந்தவித சலனமுமில்லாமல் மேகலா கிளம்பி விட்டாள்.

நான் விரைந்தேன் என் மனைவியைப் பார்க்க. அங்கு மின்நகர் படிகள் மடிந்து மடிந்து கீழ்நோக்கி மறைந்து கொண்டே மேகலாவுடன் போக நகுங்கிப்போகும் என் உணர்வுகளை அடக்க முடியாமல் விக்கித்துப்போய் நின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. ஜனனு ஜனன் ஷந்த்

"எங்கட லேபர்ஸ் ஆட்களை விட்டு இஷாணி இருக்கிற குவாட்டர்ஸ் பக்கம் கம்பி வலை எல்லாம் போட்டு கிறீஸ் பூதம் எண்டு யாராச்சும் நுழைஞ்சா மாட்டுப்படுற மாதிரி பொறி செய்யச் சொல்லி அது முடியிற நிலமையில இருக்கு.. நீ ஒருக்கா பின்னேரம்

# அதிர்வலை



**2011** ல் யாழ்ப்பாணத்தில் "கிறீஸ் பூதம்" எண்டு இரவு நேரத்தில உடம்பு முழுக்க கிறீஸ் பூசிய மர்ம நபர்கள் பெண்களோட அட்டூழியம் பண்ணிட்டிருந்த அந்தக் காலம். இரண்டாம் மாடி ஜன்னல் கரையோரத்துக்கு கறுப்பு ஜன்னல் திரை போட்ட மாதிரி கருமேகங்கள் சூழ்ந்த வானம்முட்டி நிக்க என்னைய என்ர அலுவலக முகாமையாளர், இஞ்சினியர், பகீரதி மிஸ் கூப்பிட்டு சொன்னா.

"இதப்பாரு மதுமிதா அவ இஷாணி இங்க எங்கட குவாட்டர்ஸ்ல தனியா இருக்கிற சிங்களப் பொண்ணு. அவளுக்கு இஞ்ச நடக்கிற கிறீஸ் பூத கேஸ் எல்லாம் புரியாது" அவவோட சாம்பல் கலர் ரோலிங் செயார் இடம் வலமா அசைஞ்சுக்கிட்டிருக்க நான் மேலிருந்து கீழா தலையாட்டிக் கிட்டிருந்தேன்.

இந்தப் பகீரதி என்கிற பக்கீ ஏதோ ஆப்புல என்னையக் கோர்த்துவிடப்போறா எண்டது மட்டும் விளங்கிச்சு. மனிசி மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மின் விசிறியின் விம்பம் சுழண்டுகொண்டிருந்த கண்ணாடி மேசையில் வைத்துவிட்டு இரண்டு கண்ணையும் பெரு விரலாலும் சுட்டுவிரலாலும் தேய்த்துட்டு தொடர்ந்தா

ஒபிஸ் முடிஞ்சோன்ன அவளோட அவ தங்குற குவாட்டர்ஸ்க்கு போ. போய் அது என்ன நிலமையில இருக்கு? அந்த வளவு எல்லாம் சேஃப் தானோ எண்டு கென்போர்ம் பண்ணு. நான் லேபர்ஸ் சொல்லுறதையெல்லாம் கேட்கமாட்டன். ஒரு பொம்பிளைப் பிள்ளை எண்ட வகையில நீ போய் பார்த்து ஒக்கே ஆஹ் எண்டு சொல்லு" மிஸ் சொல்லிக்கொண்டே தலையை ஆட்ட அவவோட முகத் தசைகள் ஆடுது. சுத்தம். இதுக்குப் பேசாமல் அவளிட்டயே கேட்டுத் தெரிஞ்சிருக்கலாமே? நான் ஒண்டைச் சொல்ல அவள் ஒண்டைச் சொல்லப்போறாள். எனக்கு ஏற்கனவே இஷாணி எண்டாலே பிடிக்காது. என்னோட வேலை செய்யிற மற்றப்பிள்ளைகளையும் இஷாணியோட சாப்பிட விடமாட்டன். உப்புச்சப்பில்லாத சிரிப்பை மட்டும் தான் உதிர்க்கிறனான். இவ என்னத்துக்கு தென்னிலங்கைல இருந்து 20 வயசிலேயே நிரந்தர நியமனத்தோட இஞ்ச வந்து தங்கி வேலை பார்க்கிறா? சம்பளமும் அவ்வளவுக்கு எண்டு இல்லையே. எனக்கும் 20 வயசுதான் எண்டாலும் ஒப்பந்தம் அடிப்படையில தீப்பந்தம் மாதிரி வேலை செய்யிறனே?

நேத்தும் இஷாணியோட பிரிண்டர்ல சிக்கின பேப்பரை மினக்கெட்டு வெளிய எடுத்துக்கிட்டிருக்கும் போது என்கிட்ட ஒரு விசயத்தை சொன்னா இங்கிலிஸ்ல.

"மதுமிதா நேத்து நான் இருக்கிற குவாட்டர்ஸ்க்குள்ள வித்தியாசமான வாசனை வந்துச்சு. பெயிண்ட் மணமில்லை இது வேற ஏதோ மணம். நானும் இரவு ஒபிஸ் முடிஞ்சு போற களைப்பு தானே? உடனயே மயக்கம் வாற மாதிரி நித்திரையும் வந்திட்டு. காலமை எனக்கு என்ன நடந்த தெண்டு யோசனையா இருந்தது. ஏதோ தப்பா நடக்கு தெண்டு மட்டும் புரியுது. அதோட காலமை கீழ மார்பிள் டைல்ஸ்ல எக்கச்சக்க பூச்சிகள் கிடந்தது. செத்து விழுந்து கிடந்துச்சோ? மயங்கிக்கிடந்துச்சோ? தெரியேல்லை" எண்டு. நான் கண்ணைச் சுருக்கிறதும் புருவத்தை ஏற இறங்கப் பார்க்கிறதுமா டியூப்லைட் வெளிச்சத்துல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. ஜனனு ஜனன் ஷந்த்

மினுங்கிக்கிட்டிருக்கிற அவளோட மாஜரீன் கலர் முகத்தைப் பார்த்தன். இவள் அங்க குவாட்டர்ஸ் றூம் வாசமா இருக்கோணும்ணு என்ன கறுமத்தை வாங்கி தொங்கவிட்டாளோ? இல்லாட்டி ஸ்பிறே பண்ணினாளோ…? அதுல ஏதும் கெமிக்கல் மாறிக்கீறி பூச்சிமருந்து ஸ்பிறே ஆச்சோ? இனி நான் இவளிட்ட கேட்கட்டா? எனக்குப் பிடிச்ச பொண்ணு எண்டாலும் பரவாயில்லை. நானும் "அது குவாட்டர்ஸ் எல்லாம் துப்புரவாக்குறாங்கள் எல்லோ… அதுல ஏதும் மருந்து அடிச்சிருப்பாங்கள். அந்த விளைவா இருக்கும்" மழைக்காத்துக்கு இஷாணி தன்னுடைய அறைதானே என்று சிங்களத்தில் கொழுவியிருந்த கலண்டர்ல தென்னிலங்கை சிங்கள அரசியல்வாதி சிரிச்சுக்கிட்டிருக்கார். எங்கட டிப்பார்ட்மெண்ட் மினிஸ்ட்டராய் வேற போய்ட்டார்.

"அதை விட மதுமிதா, ஒரு காகம் நான் துரத்த துரத்த போகாம அங்கயே மினக்கெட்டுக்கிட்டு இருக்கு. குவாட்டர்ஸ் திருத்த வந்த லேபர்ஸ்கிட்டயும் சொன்னன். ஆனா அவங்க வேலை செய்த நேரம் ஃபுல்லா அது வரவே இல்லை" எண்டு காற்றில கைகளால கப்பலோட்டினாள். இது வேறையா? நான் பெருமூச்சை இழுத்துவிட அவளோட உயர்தர பெர்பியூம் வாசம் என் நுரையீரலுக்க போய்ச்சு. சுத்தம் இந்த மணமே போதுமே…!! பூச்சி என்ன? எங்கட ஆச்சியே மயங்கி விழுந்து மட்டையாகிடுவா.

"அந்தக் காகம் ட்ராண்ஸ்சர்ல போயிருக்கும் போல.. நீங்களும் ட்ரான்ஸ்ரல உங்கட இடத்துக்கே போயிடுங்கோ" எண்டு சொல்லிட்டு எரிச்சல்ல இழுத்த இழுவையில பிரிண்டருக்குள்ள சிக்குப் பட்ட பேப்பர் வெளிய சிசேரியன் பிரசவமா வந்துச்சு.

மிஸ் சொன்னாவே எண்டு பின்னேரம் நான் இஷாணியோட குவாட்டர்ஸ் இருக்கிற ஒதுக்குப்புறமான இடத்துக்கு போனன். ஏற்கனவே மழை மப்புக்குள்ள பின்னேரம் 3 மணியே இரவு ஆறு மணி மாதிரி இருட்டியிருந்தது. இப்ப 4.45, 5 மணி ஆகுது. ஆள்நடமாட்டமே அற்றிருந்த அந்த மரங்கள் நிறைஞ்ச குவாட்டர்ஸ் ஏரியா மர்மப் படங்கள், பேய்ப்படங்கள் எடுப்பதற்கென்றே அளவெடுத்து உருவாக்கினது போலிருக்கு. ஆனால் நிதர்சனம் என்னவென்றால் இதற்கு முதல் தலைமைக் காரியாலத்திலிருந்து "குடியும் குடித்தனமும்" ஆக இருக்கிறவங்களுக்கு ஏதுவான வகையில இந்தக் கட்டிடம் இருப்பதால அது எங்கட குவாட்டர்ஸாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இஷாணிக்கு கண்டிப்பாகத் தங்குமிட வசதி செய்துகுடுக்கவேண்டும் என்று மேலிடத்திலிருந்து அழுத்தம் வந்ததால தற்காலிகமா இந்தக் குவாட்டர்ஸை கொடுத்துவிட்டார்கள். பைக் அஹ் கறுப்புக் கொடிகளை ஆட்டுற மாதிரி அசைஞ்சுட்டிருந்த காட்டுப்பூவரசு மரத்துக்கு கீழ நிறுத்திட்டு கறுப்பு ரெயின் கோர்ட்டைக் கழட்டி பைக்லயே வைச்சுட்டு மெல்லிய மண்ணிற கலர்ல பிரம்மாண்ட வேப்பமரங்கள், மாமரங்களுக்கு நடுவில அமைஞ்சிருந்த அந்த குவாட்டர்ஸை சுத்தி முத்தி பார்த்தன். பெயிண்ட் மணம், நுளம்புக்கு அடிச்ச புகை மணம், சருகுகள், குப்பைகள் எரிச்ச மணமெல்லாம் மூக்கை தாக்கிச்சு. பின்பக்கம் மரங்களோட இருந்த முட்கம்பி வேலியும் பின்பக்க கதவும் வர்ற இடம் வரை பொறி மாதிரி செய்திருக்கினம். பள்ளம் தோண்டி அது பள்ளம் எண்டு தெரியாத மாதிரி பலகைகள் போட்டு கம்பி நெற், பழைய சதுரக் கம்பி நெற் எல்லாம் வைச்சு செய்திருக்கினம். எனக்கெண்டா இதெல்லாம் பார்க்க ஈரக் காற்றுல நிண்டும் வேர்க்கிற மாதிரி இருக்கு. இந்த டைம் கிறீஸ் பூதம் வந்தா? நாளைக்கு நான் நியூஸ்பேப்பர்ல வருவேன்…!! ஒபிஸ்ல லிஸ்ட் அடிச்சு எனக்கு காசு சேர்ப்பினம். இஷாணி 300 ரூபா போடுவாளோ? 500 ரூபா போடுவாளோ?

குவாட்டர்ஸ் றூம் லைட்டும் எரியவில்லை. இஷாணி வந்ததுக்குரிய அடையாளங்களும் இல்லை. உள்ளே போயிருந்தால் பெயிண்ட் மணம் போகட்டும்ணு ஜன்னல் திறந்திருப்பாளே? அதுவும் இல்லை. நானும் எத்தினை தரம் தான் ஃபோன் நேரத்தைப் பார்க்கிறது.. பிறகு மணிக்கூட்டு நேரத்தைப் பார்க்கிறது…? இவகிட்ட ஒருக்கா முகத்தைக் காட்டிட்டு கிளம்பணும்னா இவளைக் காணேல்லையே? பிறகு இவள் எங்கட மிஸ்கிட்ட மதுமிதா வந்து பார்க்காமலே பார்த்த மாதிரி எல்லாம் ஒக்கே எண்டுட்டா எண்டு கோர்த்துவிட்டிருவாள். இவளிண்ட ஃபோன் நம்பர் வேற வாங்கேல்லையே? வாங்க விருப்பமும் இல்லையே..!!

என்ன ஏதோ வித்தியாசமான சவுண்ட் கேட்குதென்று மெதுமெதுவா தலையை நிமிர்த்தினேன். என் கண்கள் கருங்கடல் சுழியா விரிஞ்சுச்சு. லேசா எச்சில் விழுங்கினேன். இஷாணி சொன்ன அந்தக் காகம் இதுதான் போல. கொலை வெறிக் கனல் தெறிக்கிற அதோட அலகு அசைவு. ரொம்ப உக்கிரமான குரல்ல கரையுது. இருட்டுக்குள்ளேயும் எங்கெங்கோ சிறகடிச்சுப் பறக்குது. ஐயோ என்னையே ஒருகணம் திடுக்கிடவைச்சுச்சு.

சரி இஷாணி வரும் வரை சும்மா தானே நிக்கிறம். இந்த மதுமிதாவையே வெருட்டுதா இந்தக் காகம்? கல் எறிஞ்சு கலைப்பம் எண்டு முடிவெடுத்தேன். ஈர நிலத்தில விரலால கிண்டி ஒரு அரைக் கைமுஸ்டி அளவு கல் எடுத்தேன். குறிபார்த்தேன். கறுப்புக் காற்றில் கல் சீறிக்கொண்டு போனது. கண்ணாடி உடைந்து சில்லுச்சில்லாய் நொறுங்கி விழுந்த ஓசை. நான் கண்களைச் சுழிச்சு தலையைத் திருப்பி உதட்டையும் சுழித்தேன். காகமே காறித்துப்புதா என்னோட பந்துவீச்சைப் பார்த்து? அந்த வெளிக் கண்ணாடி உடைஞ்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய ஓட்டை வழியா பார்த்தா இருட்டுக்குள்ளேயும் மினுங்குகிற ஏதோ ஒரு அலுமாரியோட வெளிச்சம். இஷாணிகிட்ட சொல்லி எதையாவது வைச்சு இந்த ஓட்டையை மூடச் சொல்லோணும். கண்ணாடித் துண்டுகள் கால்ல குத்துப்படாம போகச் சொல்லோணும். எப்பிடியும் என்னோட கோவிக்கமாட்டாள். அதுசரி நான் தான் கண்ணாடியை உடைச்சேன்னு ஏன் சொல்லப்போறேன்?

இப்ப எனக்கு இன்னும் அந்தக் காகம் அங்கே கம்பி வேலிமேல நிண்டு கரைஞ்சுகொண்டிருக்க மூக்கு புடைத்து எரிந்தது. லேசாக நறநறவென்று பல்லைக் கடிக்கத் தொடங்கினேன். சுற்று முற்றும் பார்த்தேன்.. லேபர்ஸ் யூஸ் பண்ணி குறையில விட்டுட்டுப்போன கழிவுக் கம்பிகள், நெட் துண்டுகள் எல்லாத்தையும் என்னால முடிஞ்ச அளவுக்கு எறிஞ்சன். எல்லாம் சுவர்ல பட்டு பட்டு அந்த கிறீஸ் பூதத்துக்கு பொறி செய்திருந்த கம்பி நெட் கிடங்குக்குள்ள விழுது. கிட்டத்தட்ட நான் எறிஞ்ச ஒரு 4 கம்பித் துண்டுகள் அந்த நெட் கிடங்குக்குள்ள குத்தன நிலைக்குத்தா நிண்டுச்சு. கடைசியா என்ர கையில ஒரு வளமான பலகைத் துண்டு அகப்பட்டது. அதை சரியாக அந்தக் காகத்துக்கு குறி பார்த்தேன். எல்லாக் கோபத்தையும் சேர்த்து எறிந்தேன். ஜே…!! என் கண்ணில் சந்தோஷ ஒளிப்பிழம்பு. “மஹிந்தாவோடு மோதினாலும் மதுமிதாவோட மோதக் கூடாது சரியா?” அந்தக் காகம் நிலை தடுமாறியது. அந்த உடைஞ்ச கண்ணாடி வழியா குவாட்டர்ஸ்க்கு உள்ளே புகுந்து பறந்தது. சரியாக அந்த கண்ணாடி ஜன்னலின் மேலிருந்து ஒரு கலண்டர் வழிஞ்சு விழுந்து அந்த ஓட்டையையும் மறைச்சுட்டு. இதுவேறையா? சரி இஷாணி வந்தோன்ன அதையும் சொல்லி காகத்தை அப்புறப்படுத்துவம் எண்டா அவள் இன்னும் வர்ற சிலமனைக் காணேல்லை. எனக்கு வேற இருட்ட இருட்ட திகில் எண்ணங்கள் காலடியெடுத்து வைக்கிற வேகம் கூடுது.

உத்துப் பார்த்தால் அவள் ஒபிஸ் றூமில் கொழுவியிருக்கிற அதே வகை கலண்டர் தான். இவ தனக்கு செல்வாக்குல வேலை எடுத்து தந்த அரசியல்வாதியை குவாட்டர்ஸ்ல படம் வைச்சு கும்பிட்டாலும் ஆச்சரியப் படுறதுக்கில்லை. அப்பொழுதுதான் குவாட்டர்ஸ் வோட்டர் டாங்க் சதுரத் தூணுக்கு பின்னாலிருந்து. யாரோ பார்க்கிற மாதிரித் தோன்றியது. எனக்கு முள்ளந்தண்டை யாரோ பனியால் செய்த முள்ளுக்கரண்டியால விறாண்டுறது போலிருந்தது. இதயத்துடிப்பு வெந்நீரைப் பீறிட்ட வண்ணம் துடித்தது. ஆஹா மதுமிதா உனக்குள்ள தூங்கிட்டிருக்கிற “சுசந்திகா ஜெயசிங்க”வை எழுப்பி ஓட வைச்சிருடி.

நான் திடுக்கிட்டு யோசிச்சபடி இருக்க அம்மா ஐந்தாவது தரம் ஃபோன் எடுக்க எனக்கு இன்னும் மண்டை விறைத்தது. எங்கம்மா லோகேஸ்வரிக்கு விளக்கம் குடுக்கிறதைவிட கிறீஸ் பூதத்துட்ட கதைச்சு ஷேப் பண்ணிடுவன் போல. “அம்மா நான் கிறீஸ் பூதத்துட்ட இருந்து தப்பிச்சுட்டேன்மா” எண்டு சொன்னாலும் “எங்கயடி ஊர் சுத்தப் போனனி?” எண்டு என்னைப் பொளந்தெடுத்து லோகேஸ்வரி கொலைக் கேஸ்வரி ஆகிடுவா.

நான் விறுவிறு என்று என்னுடையை பைக் விட்ட இடத்துக்கு ஓட்டமும் நடையுமா வந்தேன். அப்பொழுது இஷாணியின் குவாட்டர்ஸ் மரக் கதவு உள்ளிருந்து மெதுவாக கிறாக்க்க் சவுண்டோட திறந்தது. ச்சே இருந்த கம்பித் துண்டுகள் கல்லுகள் எல்லாம் எறிஞ்சுமுடிச்சுட்டனே தற்பாது காப்புக்கு ஒரு தடி தண்டுகூட இல்லையே?

ஒரு ஆண் உருவம் மூக்கையும் வாயையும் வெள்ளைத் துணியால கட்டி மறைச்சபடி வெளியே வர இருட்டுக்குள் உன்னிப்பாய் பார்க்க அந்தப் பேர்வழி அந்த துணியை அகற்றிட்டு முன் பக்க லைட் சுவிட் ஐ போட்டுச்சு. வெளிச்சத்தில் பார்த்து நான் நெத்தி இளகி இதயத் துடிப்பை வழமைக்கு கொண்டு வரப்பார்த்தன். எங்கட ஒபிஸ் ஊழியர் தான். பெருமாள் எண்டு ஒரு பூச்சு வேலை செய்யும் வேலையாள் அவரோட பெயிண்ட் டின் எல்லாம் எடுத்துட்டு வந்திருக்கார். இப்ப தான் நான் நெத்தி இளகினேன். நெஞ்சைத் தடவிக்கிட்டேன்.

கதவு உள்ப் பக்கமா பூட்டுப்படுகுதில்லை எண்டு இஷாணி சொன்னவளாம். அதனால திறாங்கு வேலையும் பார்த்துட்டிருந்தவராம். அதாலதான் இஷாணியே "நீங்கள் ரிப்பியர் வேலையை செய்துட்டு பூட்டிட்டு போங்கோ. என்னிட்ட இன்னொரு திறப்பு இருக்கு. நான் ஷொப்பிங் முடிச்சுட்டு லேட்டா வருவன்" எண்டு சொல்லிப் போய்ட்டாளாம் எண்டார்.

நான் அவர்கிட்ட நான் இவ்ளோ நேரம் பண்ணின காரியம் எதையும் பத்தி சொல்லேல்லை. ஆனா பெருமாளுக்கு நான் எறிஞ்ச கல்லுகள், தடி பொல்லுகளோட சவுண்ட் கேட்கேல்லையா? சரி ஒருவேளை காதுகேட்காத ஆசாமியா இருக்கலாம். அதான் கண்ணாடி உடைஞ்சதால எட்டிப் பார்த்தவரே? ஆனா அதுக்குப் பிறகும் என்னெண்டு கண்ணாடி உடைஞ்சது எண்டு கேட்கேல்லையே? அதான் காகம் தான் கண்ணாடியை உடைச்சுக்கொண்டு உள்ள வந்தது எண்டு நினைச்சிருப்பாரே? ச்சே காகம் உள்ள போனதே இவருக்கு தெரியாதே? ஆமா ஏன் லைட் ஏஹ் போடாம வேலை செய்தவர்? அது ஏதும் கரண்ட் சம்மந்தப்பட்ட வேலையும் செய்துட்டிருந்திருக்கலாம்.

ஆமா இவர் இண்டைக்கு அரைநாள் எல்லோ? நான் தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. ஜனனு ஜனன் ஷந்த்

லீவு ஃபோர்ம் வாங்கி டேட் ஸ்ராம்ப் பண்ணான்? ஆஹ் இஷாணிக்கு அவசரமா இந்த வேலை முடிச்சுக்குடுக்கோணும் எண்டு பக்கி சே பக்கீ என்கிற பகீரதி மிஸ் சொல்லியிருக்கலாம். ஆமா இவரோட பைக் பார்க் பண்ணின சிலமனைக் காணேல்லையே? ஒருவேளை வேற யாரும் இவரை இஞ்ச இறக்கிட்டுப் போயிருப்பினம்.

இந்தாள் பெருமாள் வேற அடிக்கடி கண்ணை அகட்டி விரிச்சு ஒரு டைப்பா தள்ளாடிக்கிட்டு நிக்கிது. ஒருவேளை இந்தாள் இவ்வளவு நேரமும் குனிஞ்சு வேலை செய்துட்டு எழும்பினதால வந்த தள்ளாட்டமா இருக்கலாம். என்ன சாராய மணம் மணக்குது? கையில வைச்சிருக்கிற பெயிண்ட் டின், தின்னர், வார்ணிஷ் எல்லாம் அல்ஹகோல் மணமாட்டம் மணக்குது போல.

வாவ் மதுமிதா நீ ஒரு ஜீனியஸ் பொண்ணுடி. எப்பிடியடி இப்பிடியெல்லாம் கரக்டா என்ன நடந்திருக் குமோ அதையே யோசிக்கிறாய்? எண்டு என்னோட கொலர் இல்லாத மரூன்கலர் டொப் மேல்ப்பக்கத்தை இழுத்து என்னை நானே பாராட்டி புகழ்ந்துக்கிட்டேன். சேர்ட், டவுசர் எல்லாம் பற்பல வர்ணங்களின் பெயிண்ட் கலவை யோட நிண்ட பெருமாள் காரமான குரல்ல ஒரு விசயத்தை சொன்னார்.

"அந்த சிங்களப் பிள்ளை இஷாணி குப்பைப் பொண்ணு. நாங்க குவாட்டர்ஸ் கிளீன் பண்ணேக்க அவளோட கிச்சன் போய் பார்த்தா கிச்சன் சுவர் எல்லாம் அடுப்புக் கரி பிரட்டி வைச்சிருக்கா. நாங்களும் மேலிடத்துக்கு இதைக் கொம்பிளைண்ட் பண்ணுவமோன்னு பார்த்தா அவ ஏற்கனவே செல்வாக்குல வேலைக்கு வந்தவ. பிறகு எங்களுக்கு ஆப்பா போயிடும்ணு நாங்க ஒண்டும் பறை யேல்லை. அதான் பெயிண்ட் அடிச்சனாங்கள். நாளைக்குப் பின்னேரம் வரைக்கும் அந்தக் கிச்சனை பாவிக்க வேணாம் எண்டு சொல்லோணும். நீங்கள் அவாவிட்ட சொல்லுறீங்களா நான் போறன்" எண்டபடி கதவை வெளியேயிருந்து பூட்டி திறப்பு எடுத்தார். ஆஹா இஷாணியைப் பத்தி குறை சொல்லுறாரே? சூப்பர். இவர் சொன்னதையெல்லாம் என் னோட வேலைசெய்யிற, இஷாணிக்கு சப்போர்ட் பண்ணுற பிள்ளைகளிட்ட சொல்லி நக்கலடிக்கோணும்.

சரி சரி இதுக்கு மேல நான் இங்க நிண்டா எனக்கு அலுப்பு எண்டு நினைச்சுட்டு "இல்ல இல்ல நீங்களே சொல்லுங்கோ எனக்கு லேட் ஆகுது" எண்டுட்டு நான் இருட்டுக் காட்டுக்குள்ள இருந்து மெயின்ரோட் வந்து நிம்மதி பெருமூச்சோட வீட்ட போய்ட்டேன். பகீரதி மிஸ்சுக்கு "குவாட்டர்ஸ் சுத்துவட்டாரம் ஓக்கே. இஷாணிக்கு எட்டு அடுக்கு பாதுகாப்பு போட்ட மாதிரி இருக்கு மிஸ். என்னைக் கேட்டா இந்த இலங்கையிலயே ஒரு பெண்ணுக்கு அதி உச்ச பாதுகாப்பை ஃபீல் பண்ணக்கூடிய இடம் எண்டா அந்தக் குவாட்டர்ஸ் தான் மிஸ்" எண்டு நான் சொல்லிக்கிட்டிருக்கேக்கயே மனிசி ஃபோனைக் கட் பண்ணிட்டு. பக்கி மிஸ் எண்டுறது கரக்ட் தான். எனக்கு இரவு படுத்தா இமைகள் ஒன்று சேருதே இல்லை. ஒரே ஒரு விசயம் தான் தோணிட்டே இருந்துச்சு. குவாட்டர்ஸ்க் குள்ள கண்ணாடி ஓட்டைக்குள்ளால போன அந்தக் காகம் வெளிய வரவேயில்லை. அது எனக்கு 100 வீதம் உறுதியா தெரியும். பெருமாளும் வெளியே கதவைப் பூட்டினவரே?

ஷொப்பிங் முடிஞ்சு வாற இஷாணி அந்தக் குவாட் டர்ஸ் கதவைத் திறப்பா. லைட்டையும் போடுவா. கதவை உள் பக்கமா தாழ்ப்பாள் போடுவா. அப்பேக்க அந்த றூமுக்க அடைபட்ட காகம் தப்பிச்சு போக ட்ரை பண்ணும். அப்போ இஷாணி பின்பக்க கதவைத் திறக்கிறதுக்கு 50 வீத நிகழ்தகவு இருக்கு. காகம் கோபத்துல ஏதும் அட்டாக் பண்ண ட்ரை பண்ணினா இவ தடுமாறி அந்த கிறீஸ் பூதத்தை புடிக்க அமைச்சிருந்த பொறிக்குள்ள விழ சான்ஸ் இருக்கு. அப்பேக்க நான் எறிஞ்சு அந்த நெற்றுக்க கொழுவுப் பட்டிருக்கிற கம்பிக்கு மேல அவ விழுந்து அது இவளிண்ட உடம்புல ஏறிக்கீறி விட்டுட்டெண்டா? ஒருவேளை அவ மூஞ்சையடியில விழுந்து அவளோட கண்ணுக்க ஏறிக்கீறி விட்டுட்டெண்டா??

எனக்கு இரவெல்லாம் குப்புன்னு வியர்வைச் சுனாமி. என்ன நடக்கப்போகுதோ? எண்டு. என்ர ஒபிஸ் பொண்ணுங்க ஒண்டுரெண்டுகிட்ட இஷாணியோட நம்பர் இருக்கலாம், ஆனா நம்பர் கேட்டுடலாம் தான், ஆனா நாளைப்பின்ன இஷாணிக்கு ஏதும் அசம்பாவிதம் நடந்து அதுக்கு நான் தான் காரணம்னு எனக்கு ஏதும் பஞ்சாயத்து வந்தா?

நான் பண்ணிட்டு வந்த இந்தக் காரியத்துக்கு ஒரு ஆதாரமும் இல்லை. ஒரு சாட்சியும் இல்லை. அந்த லேபர் பெருமாள் கூட நான் போறதையும் நான் போகும் வரைக்கும் இஷாணி வரேல்லை எண்டதையும் பார்த்தவர் தானே?

அடுத்தநாள் படபடப்புகளோடு அவிழ்ந்துச்சு. நான் ஒபிஸ் போக முதல் அந்தக் குவாட்டர்ஸ் பக்கம் போய் ஒருக்கா பார்ப்பமான்னு போனன். பொலீஸ் ஜீப்பு. ஆமி. நிறையச் சனங்கள். சலசலப்பு, சச்சரவு.

எனக்கு உயிரே போய்ட்டு.

நானும் மண்டை விறைச்சு ஒண்ணுமே தெரியாத மாதிரி ஹெல்மெட்டைக் கூடக் கழட்டாமல் ஆக்களை விலத்திப் போக அங்க நிண்ட எங்கட ஒபிஸ் லேபர்ஸ் கதைக்கிறதைக் கேட்டன் "இவன் பெருமாளுமேல எனக்கு முந்தநாளே டவுட் வந்தது. மயக்கமருந்தையும் ஏதேதோ ஸ்பிறே பெயிண்டையும் வைச்சு பின்னேரம் அந்தப் பிள்ளையோட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செ. ஜனனு ஜனன் ஷந்த்**

றூமுக்கு பெயிண்ட் அடிச்சிருக்கான். ஆனாக் கடவுளே எண்டு அந்தப் பிள்ளை பெயிண்ட் மணம் தாங்காம மற்ற றூம்ல படுத்து தூங்கியிருக்கு. எண்டாலும் மயக்கமா தான் இருந்ததாம்" அவர் சொல்லிக்கொண்டிருக்கேக்கயே எனக்கு பூச்சிகள் எல்லாம் கீழ விழுந்துகிடந்தது எண்டு இஷாணி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

"நேத்து இரவு பெருமாள் அரைநேரம் லீவு எண்டுட்டு வீட்டயும் போகாம குவாட்டர்ஸ்ஸுக்குள்ளயே ஒளிஞ்சிருந்திருக்கான்" ஆஹா அப்ப அந்தாள் கதவைப் பூட்டிட்டு போகேல்லையா? என்னை காய் வெட்டி அனுப்பவா அப்பிடிப் பண்ணினது?


"இரவு இஷாணி லேட்டாப் போய் கதவைத் திறக்க மயக்க மருந்து அடிச்சு மயக்கமாக்கப் பார்த்திருக்கான். அப்ப உள்ளேருந்து காகம் ஒண்டு அவனை சுத்திச் சுத்தி கொத்த அவன் தட்டுத் தடுமாறி பின்பக்க கதவை திறந்து ஓட கிறீஸ் பூதத்துக்கு வைச்சிருந்த பொறியில அவன் விழுந்து உள்ள சிக்கிக்கிடந்த கம்பியெல்லாம் அவண்ட மூஞ்சையெல்லாம் ஏறி அவனோட கண் எல்லாம் குத்திட்டு. அவனோட அலறல் சத்தம் தூரத்துல இருந்த யாருக்கோ கேட்டு ஆக்கள் வந்து அம்புலன்ஸ்க்கும் பொலிஸ்க்கும் தகவல் குடுத்தாங்க." எனக்கு அதைக் கேட்டு பிரம்மாண்டக் குளவி கொட்டினது போல இருந்துச்சு. எனக்கு ஏற்கனவே பெருமாளுவோட நடத்தையில சந்தேகம் இருந்தும் சம்மந்தம் சம்மந்தமில்லாம எனக்கு நானே விடை சொல்லி என்னையே ஜீனியஸ் எண்டு வேற பாராட்டிக்கிட்டனே? எண்டாலும் அந்தப் பெருமாளைப் பாராட்டோணும் இந்த மதுமிதாவுக்கு மயக்கமருந்து ஸ்பிறே அடிக்காததுக்கு.

எது எப்பிடியோ இஷாணியை நான் மறைமுகமாக் காப் பாத்திட்டன் தானே? நான் டெனிஸ் பந்து ச்சே தேச பந்து விருது வாங்கின சந்தோசத்தோட கண்ணுல 18 வோற்ஸ் வொரண்டி பல்ப் ஒளிர ஆக்களை விலத்தி அந்த குவாட்டர்ஸ் பின்பக்கம் போக அங்க நேற்றையான் இடத்தில நிண்டு அதே முறைப்போட அந்தக் காகம். நான் அதுக்கு ஒரு பிளையிங் கிஸ் குடுத்தேன்.

"அப்புறம் அந்தச் சிங்களப் பிள்ளை எங்கயாம்?"

"பகீரதி மிஸ் தன்னோட வீட்ட கூட்டிட்டுப் போய்ட்டாவாம்."

எனக்கு ஹார்ட் அட்டாக்-கே வர மேல தலையை உயர்த்தி ப்ளாஷ்பாக் அஹ் யோசிச்சன். "இந்த இலங்கையிலயே ஒரு பெண்ணுக்கு அதி உச்ச பாதுகாப்பை ஃபீல் பண்ணக்கூடிய இடம் எண்டா அந்தக் குவாட்டர்ஸ் தான் மிஸ்"



# மரியாதைமிக்க பிரியாவிடை

கே.எஸ்.சிவகுமாரன் அவர்களும் நம்மிடம் இருந்து நீங்கிவிட்டார். இனி வாழ்தல் சாத்தியமில்லை என்பதை அவரே முடிவுக்கு வந்து ஒரு சில ஆண்டுகள் ஆகின்றன. உயிர்வாழ்தலின் மீதான அவ நம்பிக்கையை தன்னை சுற்றி இருப்பவர்களுக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் அறிவித்தும் வந்தார். நேரடி வெளித் தொடர்புகளை அவர் அறுத்துக் கொண்டபோதும் முகநூலில் அவ்வப்போது தோன்றி சில நிலைத்தகவல்களை இட்டுச் சென்றார்.

உலகை விட்டு நீங்கியபின் இந்த சமூகத்தில் அவரின் இடம் என்ன என்பது பற்றி அதிகம் இறுதிக் காலங்களில் சிந்தித்துக்கொண்டிருந்த ஒருவராக இருந்தார் என்பதை அவரின் அணுகுமுறைகளில் இருந்து நம்மால் உணர முடிந்தது.

சுமார் முப்பது ஆண்டுகாலமாக அவரை அறிவேன். 90களில் நாம் கொழும்பில் கூடும் பெரும்பாலான இலக்கிய கூட்டங்களில் அவரும் ஆஜராகி இருப்பார். சரிநிகரில் சில தடவைகள் எழுதி இருக்கிறார். தமிழ்ச் சூழலில் ஆங்கில ஊடகங்களிலும் கொடிகட்டிப்பறந்த, நன்றாக அறியப்பட்ட மூவரைத் தான் நான் அதிகம் அறிவேன். ஒருவர் தராக்கி என்கிற டி.சிவராம், அடுத்தவர் டி.பி.எஸ்.ஜெயராஜ், அடுத்தவர் கே.எஸ்.சிவகுமாரன்.

சிவராம் கொல்லப்பட்டுவிட்டார். டி.பி.எஸ். தொடர்ந்து இயங்கி வருகிறார். இவர்களில் அரசியல் எழுத்துகளைத் தவிர்த்து ஆங்கிலத்தில் தமிழ்ச் சமூக கலை இலக்கிய போக்கை தொடர்ந்து எழுதி பரப்பி வந்தவர் கே.எஸ். சிவகுமாரன். ஆங்கிலம் அறிந்த சிங்கள சமூகத்துக்குத் தமிழ்ச் சமூக இலக்கிய பண்பாட்டுப் போக்கை அறிந்து கொள்வதற்கு கே.எஸ்.சிவகுமாரன் தான் ஒரு reference ஆக இருந்து வந்தார் என்பதைக் கவனிக்க வேண்டும். தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்ல பல தமிழ் எழுத்தாளர்களை ஆங்கில வாசிப்பு சமூகத்துக்கு அறிமுகம் செய்ததிலும் கே.எஸ்.சிவகுமாரன் அவர்களுக்கு பெரும் பங்கு உண்டு.

எப்போதும் இனிமையாக உரையாடுபவர். அவரின் ஆற்றல், அனுபவம் குறித்து ஒரு போதும் தலைக்கனம் இல்லாதவர். எங்கும் மிகவும் தன்னடக்கத்தை வெளிப்படுத்துவது அவரின் அடிப்படை குணமாக இருந்தது.

97இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதலாவது தடவை தமிழ்மொழியிலும் ஊடகக்கற்கையை ஆரம்பித்தார்கள். அந்த முதல் அணியில் கற்கச் சென்றவர்கள் அனைவரும் அப்போது ஊடகங்களில் இருந்த மேல் மட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகவியலாளர்களாக இருந்தார்கள்.

சரிநிகரில் இருந்து நானும், சிவகுமாரும், ஷகீபும் அந்த அணியில் இருந்தோம். எங்களுக்கு விரிவுரையாளர்களாக பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் நுஹ்மான், வீரகேசரி பிரதம ஆசிரியர் சிவநேசச் செல்வன், தினகரன் பிரதம ஆசிரியர் சிவகுருநாதன் போன்றோரோடு கே.எஸ்.சிவகுமாரனும் பணியாற்றினார்கள்.

கே.எஸ்.சிவகுமாரன் முதற் தடவை அந்த வகுப்புக்கு வந்தபோது அவர் வெட்கப்பட்டும், குறுகிக் கொண்டும் வந்தது இன்னும் நினைவில் நிற்கிறது. அங்கே மாணவர்களாக இருந்தவர்கள் அனைவரும் அவரின் நண்பர்கள், சக துறையைச் சேர்ந்தவர்கள். அவர் மதிக்கிற எழுத்தாளர்களாகவும் இருந்த வர்கள். அவர் முன்னால் வந்து உங்களுக்கு நான் என்ன சொல்லிக் கொடுக்கப் போறேன் என்று தான் ஆரம்பித்தார். அவர் ஒரு விரிவுரையாளர் என்கிற வகையில் அவருக்கு உரிய மரியாதையை கொடுத்து அனைவரும் அவரின் கூச்ச சுபாவம் போக ஒத்துழைத் தார்கள். ஏனென்றால் கே.எஸ். சிவகுமாரன் என்பவர் எங்கள் எல்லோராலும் மதிக்கப்படுகிற மூத்த எழுத்தாளர். நான்காண்டு களுக்கு முன்னர் கொழும்பில் எனது "1915 கண்டி கலவரம்", "அறிந்தவர்களும் அறியாதவையும்" நூல் வெளியீட்டு விழாவுக்கு வந்து வாழ்த்து தெரிவித்துச் சென்றது தான் நான் அவரை இறுதியாக சந்தித்தது. விரைவில் வெளிவரவுள்ள எனது அடுத்த நூலான இலங்கையின் பதிப்புப் பண்பாட்டு மரபு பற்றிய நூலுக்கு அவரிடம் அணிந்துரை பெற விரும்பி இருந்தேன். எனது நூல்களுக்கு நான் விரும்புகிற அதே வேளை என்னையும், எனது எழுத்துக்களையும் அறிந்த எழுத்தாளர்களிடம் வரிசையாக

அணிந்துரை பெறுவதே எனது நோக்கமாக இருந்தது. அந்த வரிசையில் அவருக்கும் இதன் மூலம் மரியாதையை செலுத்த வாய்ப்பை உருவாக்கிக் கொள்வதற்காகவே சில மாதங்களுக்கு முன்னர் அவரிடம் இதற்கான கோரிக்கையை விடுத்திருந்தேன். அவரை இழப்பதற்குள் இதனை செய்ய வேண்டும் என்பது எனது நோக்கமாக இருந்தது.

அவரை நான் அண்ணா என்று விழித்தேன். அவர் என்னை மகனே என்று விழித்திருந்தார். அவரிடம் அணிந்துரை பற்றி கேட்ட வேளை அவர் ஆஸ்பத்திரியில் இருந்தபடி பதில் அளித்திருந்தார். வீடு சென்றபின் செய்கிறேன் என்று பதில் அளித்திருந்தார். ஆனால் அதற்கு அவரின் உடல் ஒத்துழைக்கும் வரை காத்திருந்தேன். ஆனால் அதற்குள் அவரை இழந்துவிட்டோம். ஆங்கிலத்தில் தமிழ் இலக்கியத்தை தொடர்ந்தும் கொண்டு சென்றுகொண்டிருந்த அவரின் இடம் வெற்றிடமாகவே இருக்கிறது. இலக்கிய உலகில் அவரின் பெயர் நிலைத்திருக்கக் கூடிய அளவுக்கு அவரின் இலக்கியப் பணிகள் உள்ளன. ஈடு செய்ய முடியாது இழப்பு.

அவருக்கு எமது இதய அஞ்சலி. மரியாதை மிக்க பிரியாவிடை.

**சரவணன் கோமதி**

நன்றி : முகநூல்

குமுதன் பட்டணத்தில் உயர்தரம் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் தன் குடும்ப வறுமையை நினைத்து வருந்த நாட்களே இல்லை. அவனது சொந்தக் கிராமம் எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாத ஒரு குக்கிராமம். அவனது அம்மா அயல் வீடுகளில் பாத்திரங்களை கழுவியும், மா இடித்தும் தன்னையும் காத்து தன் பிள்ளை களையும் வருகிறாள். குமுதனது அப்பா இறந்த பிறகு அவனது அம்மா தான் குடும்ப பொறுப்பு அனைத்தையும் தனியாளாக நின்று தாங்கி வருகின்றார். அவர் வேலை செய்வதில் சிறிதளவு மிச்சம் பிடித்து குமுதன் படிப்புச் செலவுக்காக மாதாந்தம் அவனிருக்கும் விடுதிக்கு பணத்தை அனுப்பி விடுவார்.

# எதிர்பாராதது

சம்பூர் சமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் சமரன்

அவனும் நன்றாகத்தான் படித்தான் என்னமோ! தெரியவில்லை உயர்தரத்தில் நுழைந்தவுடன் அவனும் எதிர்பாற் கவர்ச்சியினால் சிக்குண்டு அதன்வழி நடக்கலானான். படிப்பும் படிப்படியாக தளர்ந்தது.

ஒரு முறை இரண்டாம் தவணை விடுமுறைக்காக தன் கிராமத்துக்கு வருகிறான் வரும்போது பட்டணத்து நண்பர்கள் அவனுக்குக் கொடுத்த ஒரு தொலைபேசி ஒன்றினையும் எடுத்து வருகின்றான்.

"பஸ்ஸில சரியான குலுக்கமா இருக்குமே"

"நம்ம ஊரு ரோட்டு எப்பதான் நல்லா இருந்திருக்கு, எனக்கு சரியான அசதியா இருக்கு இந்த பைய கொஞ்சம் பிடிடா தம்பி!"

"அண்ணா நான் டவுனுல வாங்கிட்டு வரச் சொன்ன விளையாட்டு பொம்மைய நீ வாங்கி வந்ததா?"

"இல்லடா தம்பி அண்ணா மறந்துட்டேன்"

"சரி பரவாயில்ல",

"வா சீக்கிரம் போவம் வெயில் மண்டைய பொளக்குது" என்றபடி அம்மா குமுதன் சின்னகுட்டிதம்பி மூவரும் தங்களின் ஒரே ஒரு சொத்தான அந்தக் குடில் வீட்டுக்கு சென்றார்கள். குமுதனது அப்பா இறந்து பத்து வருடங்கள் இருக்கும் இன்னும் அந்த ஒட்டை குடிசையில் தான் இவர்களின் தஞ்சம்.

குமுதன் இந்த முறை 15 நாட்கள் விடுமுறைக்காக வந்திருந்தான். அன்று மாலை அவன் காதலியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த நொடி தொடங்கி அவனும் அவளுடன் மணிக்கணக்காய் பேசுவான், நேரம் போறதே தெரியாது அருகில் இருப்பவரைக் கூட அவன் கவனிப்பதில்லை. இவ்வாறு ஒருநாள் பேசிக்கொண்டிருக்கும்போது அவனது தம்பி அவனிடம் தெரியாத ஒரு பாடத்தை விளங்கப்படுத்தித் தருமாறு கூற குமுதனும் "தன்னை குழப்ப வேண்டாம் இங்கிருந்து போ! கதைச்சுக்கொண்டு இருக்கிறேன்" என்று கோபத்துடன் கத்தினான். தம்பி பயந்து அழத் தொடங்கினான் அம்மாவிடம் சென்று அடுப்பங்கரையில் உட்கார்ந்தபடியே

"அம்மா அண்ணா பாடம் சொல்லித்தர கேட்டா ஏசுறான்"

"விடு மகன், அண்ணா அவனிட வகுப்பு பிரண்டோட ஏதோ முக்கியமான விசயம் கதைக்கிறான் போல நீ அவனை குழப்பினால் ஏசாம என்ன செய்வான்" என்று கூறினாள். தன் மகனின் காதல் விசயத்தை அறியாதவளாகவே அவள் இருந்தாள். அவன் படித்து நல்ல வேலை எடுத்து குடும்பத்தை பார்ப்பான் என நம்பி இருந்தாள். அப்படியே நம்பியிருந்தவள் குமுதனிடம் நேரம் கிடைக்கும் போதெல்லாம் குடும்ப நிலையை பற்றியும் எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் அவனுக்கு கூறுவாள். அவனும் அதை தலையசைத்துக் கொண்டே கேட்பான். அவன் மனதில் பள்ளிப்பருவ காதல் இருந்தாலும் குடும்ப பொறுப்புக்கு ஒரு இடம் ஒதுக்கி வைக்க அவன் தவறவில்லை.

முன்பெல்லாம் தனியாகப் படித்துக் கொண்டிருக்கும் போது அவன் மனதில் சிறுவயது சந்தோசங்கள், அப்பா இறந்த பின்னர் தன் தாய் தன்னையும் தம்பியையும் வளர்க்க தனியாளாக எவ்வளவு துன்ப துயரங்களை அனுபவித்தார் என்பதையும் நினைப்பான். அவன் தாய் தெருவில் போனாலே போதும் அந்த தெருவில் உள்ளவர்கள்

"இந்தா போறாள் சின்ன வயதிலேயே புருசன பறிகொடுத்த சனியன், மூதேவி இவள் போற இடம் விளங்காது" என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்ப்பார்கள். ஆனால் அவள் எதையும் பொருட்படுத்தாது இன்னொரு திருமணம் கூட முடிக்காது தனது இரு பிள்ளைகளையும் இருகண்கள் என கொண்டு இன்றுவரை தனியாக கஸ்டப்படுகிறாள். விடுமுறையில் வீட்டிற்கு குமுதன் வந்தால் அவனிடம் அவள் எந்த வேலையுமே சொல்வதில்லை. விறகு கொத்தக்கூட அவனை அழைப்பது இல்லை. ஏனென்றால் அவன் டவுனில் படிக்கிற புள்ள, கையில அடிபட்டு ஏதாவது நடந்தா! அவன் எப்படி பேனா பிடித்து எழுதுவான் என்று அவளுக்கு நினைப்பு.

அதுமட்டுமா அயல் வீடுகளில் அவள் வேலை செய்து கையெல்லாம் வெந்து மரத்துப் போச்சு, அவள் கையிலிருப்பது கைரேகைகள் இல்லை, அவள் இவ்வளவு காலம் கஸ்டப்பட்டு கடந்து வந்த பாதைகளின் தடங்கள். இதெல்லாம் எதற்காக? தன்பிள்ளை படித்து வருவான் தன்னையும் தனது இளைய மகனையும் எதிர்காலத்தில் ஏதோ ஒரு வகையில் பார்த்துக் கொள்வான், என்றும் தெருவால போறப்ப வசை பாடுற அந்த கிழட்டு முண்டங்களுக்கு தன்மகன் உத்தியோகம் பார்த்து, வாய மூட வைக்கணும். தானும் தலை நிமிர்ந்து நடந்து, "எண்ட பிள்ள படிச்சி பெரிய ஆளா ஆயிட்டான்" என்று சொல்லி தெரியனும் என்று அவள் மனசில பெரிய வைராக்கியமான ஒரு கோட்டையை கட்டி வைத்து இருந்தாள். குமுதன் அவளின் ஆசையை நிறைவேற்றத்தான் போகிறான், ஆனால் இடையிலே இந்த பருவக்காதல் அவன் கண்ணை மறைக்கின்றது.

குமுதன் படிக்கும் நகரத்தில அவன் தன் பெரிய இடத்துப் பிள்ளை போல உடுப்பு போடவே வேணும், கண்ணாடி போட வேணும், புது ஸ்டைல் ஆக இருக்கனும், தனது கேர்ள் பிரெண்டுக்கு ஏதாவது பரிசு பொருட்கள் வாங்கி கொடுத்துட்டிருக்கணும். இதற்கெல்லாம் காசு எங்கிருந்து வருகிறது, அம்மா அனுப்பும் பணம் போதுமா! அது ஒரு சிறிய அளவு தொகை மட்டுமே. அது அவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் சமரன்

மாதாந்த செலவுக்கே போதாது. மிச்சத்துக்கு அவன் தன் நண்பர்களிடம் வாய்கூசாமல் கடன் கேட்டு வாங்கவும் பழகிக் கொண்டான் என்று கூறலாம். அவ்வாறு இருந்தும் அவனது மனநிலையில் மாற்றம் என்பது சற்று தளர்வாக இருந்தது.

லீவு முடிந்து போகிறதுக்கு முன் இரண்டு நாட்களாவது நல்ல சோறு கறி தன் பிள்ள சாப்பிட்டிற்று போகட்டும் என்று சொல்லிக்கொண்டு இருந்தாள். அவனது தாய் கமலம் ஊர் வட்டார தலைவர் வீட்ட பாத்திரம் கழுவ போறப்போ அவரின் மனைவிகிட்ட கொஞ்சம் பணம் கேட்டிருந்தா அந்த பணத்தை வாங்கிட்டு வந்து கொஞ்சத்தை எடுத்திட்டு நல்ல கறி வாங்க சந்தை பக்கம் போயிட்டா, அந்த நேரம் குமுதனின் போஃன் அலறியது எடுத்து ஹலோ என்றான். "நான் தான்டா ராம், நீ லீவு முடிஞ்சு வரக்குள்ள காசு எடுத்துட்டு வாடா!" என்று ஒரு குரல். குமுதனுக்கு பகீர் என்று இருந்தது. மேலும் அவன் சொல்வதைக் கேட்டான். "ஏன்டா நம்ம டீம் எல்லோரும் அவங்கவங்க கேர்ள் பிரண்டுடன் ஆடிப்பாட வீச்சில் பார்ட்டி ஒன்று அரேஞ்ச் பண்ணி இருக்கம் நீயும் உன் கேர்ள் பிரண்ட் சௌமியோட கும்மாளம் அடிக்கலாம், வரியா" என்று ராம் கேட்டான். குமுதன் வாய் பேசாது நின்றான். பணத்துக்கு நான் எங்கே? போவேன் என்று திணறினான். ராமிடம் "பார்ப்பம் எப்படியாவது காசு எடுத்துட்டு வரேன்" என்று சொல்லி போனை வைத்தான். பின் யோசித்தான் அப்போது தான் ஞாபகம் வந்தது அவனது அம்மா முந்தநாள் சாமான் அடுக்கி வைக்கிற போது 1000 ரூபாய் தாளை அடிப்பாணையில் வைத்தது. "அம்மா வாரத்துக்குள்ள பணத்தை எடுக்கணும்" கொண்டே ஓடிப்போய் அங்கு கைவைத்து தேடி எப்படியோ பணத்தை எடுத்து விட்டான். "அப்பாடி அங்கபோயிற்று சௌமியோட ஜொலியா இருக்கலாம்" என்று அவன் கனவு கண்டான். கமலம் சந்தைக்கு போய் வந்து சாமான்களை வைத்து விட்டு மீதிப் பணத்தை பானைக்குள் வைக்க அருகில் வர பயந்து போன குமுதனோ தாயிடம் "தாங்க அம்மா காச அத நான் வைக்கிறேன், நீங்க இப்ப தான் வெயில்ல இருந்து வந்திருக்கீங்க, ஆற அமர இருந்திற்று சமையுங்க" என்று பணத்தை வாங்கி வைத்தான். அம்மாவும் அவனிடம் கொடுத்துட்டு சமையலறைப் பக்கம் போய் விட்டார். சமையல் முடிந்து சாப்பாடும் முடிந்தது.

லீவு முடிந்து மீண்டும் விடுதிக்குப் போகும்நாள் வந்தது. குமுதன் ஏற்கனவே ஆயத்தமாக வைத்திருந்த பையை தூக்கிக்கொண்டு பஸ் வரும் பிரதான வீதிக்கு வந்தான். கூடவே தாயும் அவரது குட்டிதம்பியும் வழியனுப்புவதற்காக அவனுடன் வந்திருந்தார்கள். போகும் போது குமுதன் மனதிலே வீச்சு பார்ட்டி பற்றிய எண்ணமும், அந்த ஆயிரம் ரூபாய் பணம் பற்றிய எண்ணமும் அலைமோதிக் கொண்டிருந்தன. பஸ் வந்தது. குமுதன் அம்மா மற்றும் தம்பியிடம் விடைபெற்றுக் கொண்டு பஸ்ஸில் ஏறினான். பஸ் புறப்பட்டது போகும் போது பச்சை வயலும், பறவைகளின் சத்தமும், வாய்க்காலில் சின்ன பட்டாளம் குளிப்பதும் கும்மாளம் கொட்டுவதையும் கண்டான். இவற்றையெல்லாம், ரசித்தவாறு பயணத்தைத் தொடர்ந்தான். சுமார் ஒன்பது மணி நேர பயணத்தின் பின்னர் அவனது இருப்பிடம் வந்தது.

இறங்கிய போதுதான் பஸ்ஸின் பயணப் போராட்டத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட நிம்மதி அவனுக்கு வந்தது. தன் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தவன் வீட்டுக் கவலையை மூலையில் தூக்கிப் போட்டான். அடுத்தநாள் வீச்சில் கும்மாளம் அடிப்பதைப் பற்றி மனம் சிந்தித்தது. அடிக்கடி அவன் கொண்டு வந்த பணத்தை போய் தன்னுடைய பையிலே பத்திரமாக உள்ளதா? என கவனித்தான். ஏனென்றால் அது காணாமல் போனால் அவன் அந்த பார்ட்டிக்குப் போக முடியாது என்ற பயமும் இருந்தது. அந்த ஆயிரம் ரூபாய் தாள் இருக்கிறதா என்று பார்த்தே அன்றைய இரவு கழிந்தது. அடுத்தநாள் தன்னிடம் இருக்கிறதிலேயே நல்ல சேர்ட்டையும், டவுசரையும் எடுத்து போட்டிட்டு, ஆயிரம் ரூபாயையும் எடுத்திட்டு போனான். அவன் மனம் அன்று சந்தோசமாக இருந்தது. புதிதாய் பூத்த புதுமலர் போல அவன் முகமும் உள்ளமும் மலர்ந்தது. வீச்சுக்கு வந்தான் அங்கே ராமு வந்தான்

"என்னடா இவ்வளவு லேட்டா வாற"

"இல்லடா எங்கிட்ட ஆயிரம்ரூபா தான் இருக்கு பரவாயில்லையா?"

"பரவாயில்லடா, சௌமி உனக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கு" குமுதன் ஆவலோடு போனான். எல்லோரும் வந்திட்டாங்க அந்த வீட்டிலே பார்ட்டி தொடங்கியது. சௌமி குமரனிடம் "எவ்வளவு காசு பார்ட்டிக்கு போட்டாய்" என்று கேட்க, அவன் தயக்கத்துடன் ஆயிரம் என்றான். அவ்வளவுதான் சௌமிக்கு கோபம் கொல்லனின் உலை நெருப்பு போல வந்தது. "குமுதா! இதோ பார் உன் பிரண்ட்மார் அவங்க அவங்க கேள்ப்ரண்டுக்கு ஐயாயிரம் பத்தாயிரம் எண்டு செலவழிக்கிறாங்க, நீ வெறும் ஆயிரம் ரூபா நினைக்கவே அருவருப்பாக இருக்கிது",

"இல்ல சௌமி அதுவந்து....." என்று குமுதன் வாய் தடுமாறினான். மேலும் சௌமி "இந்தப் பாட்டிக்கு கூட செலவழிக்க உனக்கிட்ட காசு இல்ல, அப்ப எப்பிடி நான் கேட்கிற நேரம் எல்லாம் எனக்கு புடிச்சத வாங்கித் தரப் போற? இவ்வளவு நாள் தந்ததெல்லாம் கடையில களவு எடுத்து தந்திருக்கிறாய் போல" அவளின் வார்த்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் சமரன்

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல மனதை சுட்டது. அவனின் காதல் அந்த நிமிடம் வேரோடு அடியற்ற மரம் போல் சாய்ந்தது. அவமானத்தால் துடித்தான், அழுகை வந்தது ஆனால் கண்ணீர் வரவில்லை அவனது தாயின் உதிரமே கண்ணீராக வழிந்தது. அவளும் "என் கண் முன்னே நிற்காதே" என்று அவனை திட்டி அனுப்பினாள்.

குமுதன் கால் போன போக்கில் நடந்து தன் விடுதிக்கு வந்து, தன் அறைக்குள் நுழைந்தான். கதவை மூடிக் கொண்டு சத்தமாக அழுதான். அவளை நினைக்க நினைக்க அவனுக்கு கோபம் கோபமாய் வந்தது. தன்னை நினைத்து தன்னையே வெறுத்தான். அவன் மனம் ,இடுகாடு போல வெந்து தகித்தது. அப்படியே அழுதே கண்ணயர்ந்தான். மாலை நேரம் கதவு தட்டும் சத்தம் கேட்டு விழித்தான், கதவைத் திறந்தால் அங்கே விடுதி பணியாளன் ஒருவன் வந்து உங்களுக்கு அவசர தந்தி என்று கூறி தந்தியை நீட்டினான். அதை வாங்கி படித்தவன் அப்படியே ஆதாரமற்ற கம்பம் போல் மயங்கி விழுந்தான். அதில் அவனது அம்மா இறந்துவிட்டார் என்ற செய்தி அவனை உலுப்பியிருக்க வேண்டும். மயக்கம் தெளிய வைத்த பின்னர் எழுந்து தனது உடுப்பு பையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தான். ஆனால் விடுதி முகாமையாளர் அவனை வீட்டுக்கு அனுப்பவில்லை. ஏனென்றால் உயர்தரமாணவன் அல்லவா! அவன் தகுந்த பாதுகாப்பு இரவில் செல்லும் போது இருக்காது. பிறகு ஏதும் அசம்பாவிதம் நடந்தால் தங்களது விடுதிக்குத்தான் கெட்டபெயர் வரும் என்று அவர் விடவில்லை. வீட்டுக்கு போகலாம் என்றால் அவனுக்கு அவர்களின் பேச்சு இடி விழுந்தது போல் இருந்தது.

அடுத்த நாள்காலையில்விடுதியை விட்டு புறப்பட்டு ஓட்டமும் நடையுமாக பஸ் நிலையத்திற்கு வந்தான். கையில் பணமும் இல்லை உதவி கேட்க தெரிந்தவர் எவரும் இல்லை, என்ன செய்வது என்றறியாமல் தவித்தான். அங்கிருந்த வர்களிடம் "நான் ஊருக்குப் போவதற்கு பணம் இல்லை, நீங்கள் எனக்கு பணம் தந்து உதவுங்கள் நான் எப்படியாவது உங்களுக்கு அடுத்த முறை வரும்போது தந்து விடுவேன்" என்று கூறி அழுதான். யாருமே அவனுக்கு மனம் இரங்கவில்லை என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கி பஸ் நிலையத்தில் ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்றான். அவனது நிலையைக் கண்ட ஒருவர் அவனிடம் வந்து "என்னபா உனக்கு நடந்தது" என்று கேட்க குமுதனும் தனது அம்மாவின் இறப்பு செய்தி பற்றி கூறினான்.

அதை கேட்டு கலங்கிய அந்த பெரியவர் அவனுக்கு ஊருக்குப் போக தேவையான பணத்தைக் கொடுத்தார். அவனும் நன்றி கூறி பணம் கிடைத்த நிம்மதியுடன் அதைப் பெற்றுக்கொண்டு பஸ்சுக்காக காத்திருந்து பஸ் வந்தவுடன் அதில் ஏறிக் கொண்டு தன் ஊருக்குப் புறப்பட்டான். பலமணி நேர பஸ் பயணத்தின் பின்னர் இறங்கி அவனது வீட்டிற்கு ஓடோடிச் சென்றான். அவனுடைய எண்ணம் முழுவதும் அவனது குட்டிதம்பியின் தற்போதைய நிலை பற்றியதாகவே இருந்தது. தலைதெறிக்க ஓடினான். ஒருவாறு அவனது வீட்டை அடைந்தான், அங்கு தம்பி தனியே நின்று அழுது கொண்டிருந்தான் வீட்டில் இன்னும் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். அவனது தம்பியை தனது பக்கத்து வீட்டு அக்கா அணைத்துக் கொண்டாள். தம்பி குமுதனைக் கண்டதும் அண்ணா! என்று ஓடிவந்து அணைத்துக் கொண்டு விம்மி விம்மி "அண்ணா அம்மா! அம்மா! " என்று அழுதான். என்ன நடந்தது என்று குமுதனுக்கு தெரியாது அங்கிருந்தவர்கள் அவனிடம் வந்து நடந்த விசயத்தை கூறினார்கள்.

அடுப்பு எரிப்பதற்கு விறகு எடுக்க கமலம் வழமை யாக அந்த ஊரின் ஒதுக்குப்புறமாக உள்ள மலைப்பக்கம் ஆட்களுடன் செல்வாள். அவ்வாறே நேற்றும் சென்ற போது அந்த மலையில் உள்ள கல்லை உடைப்பதற்காக வைத்திருந்த வெடி தவறுதலாக வெடித்ததால் சிதறிய பாரிய கற்கள் அவள் மீது விழுந்து நசுங்கி அவ்விடத்திலே உயிர் போய் விட்டது என அவர்கள் சொல்ல அதை கேட்கவே குமுதனது மனம் வெந்து நெஞ்சம் சிதைந்தது. வேதனை தாங்க முடியாமல் விம்மி விம்மி அழுதான். ஐயோ என்ன பாவம் செய்தார்கள் இந்த பிள்ளைகள். ஆண்டவன் இரக்கம் காட்டவில்லை. "அம்மாவைக் கூட நான் கடைசியாக பார்க்கவில்லையே எல்லாம் நான் செய்த பாவம்" என்று சொல்லி மனம் வேதனையால் துடித்தான். உடல்கள் நசுங்கி இருந்ததால் அதனை நேரத்திற்கு அடக்கம் செய்து விட்டதாக அவர்கள் கூறினார்கள். அவன் சற்று வளர்ந்தவன் என்பதால் பலமணி நேர போராட்டத்தின் பின் அழுகையில் இருந்து தேறிவிட்டான். ஆனால் குட்டித்தம்பியின் அழுகையை நிறுத்த முடியவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் தாயை நினைந்து இருவரும் தவித்தார்கள். சில மணி நேரம் மௌனமாக இருந்த குமுதன் நிமிர்ந்து சுவரைப் பார்த்தான். அங்கே தனது அம்மாவின் நிழற்படம் ஒன்று தொங்குகின்றது. அதிலே கமலம் தன் பிள்ளைகள் இருவரையும் பார்த்து சிரித்த வண்ணம் இருந்தாள். அந்தப் படத்தைக் கழற்றி கையில் எடுத்து வைராக்கியத்தை மனதிலேயே வரவைத்துக் கொண்டு, ஒரு நாள் நானும் படித்து அம்மாவின் ஆசைப்படி உத்தியோகம் எடுத்துக் காட்டுவேன் என்று மனதில் உறுதி கொண்டு தன் நெஞ்சோடு அந்த படத்தை அணைத்துக் கொண்டு சுவரோடு சாய்ந்து கொண்டான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனால்

# ஜன்னல்

அது நீர்கொழும்பின் நிச்சலனமிக்க தெருக்களில் ஒன்று.அந்த மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் சட்டென விரைந்தாள் ஹமீதா. ஜன்னல் திரையை மெல்ல விலக்கினாள்.
தட்..ட்..
அந்த இளைஞன் முன் வீட்டின் கதவை தட்டிக்கொண்டிருந்தான். கதவு திறக்கப்பட்டது. உள்ளே சென்றவன் பத்து நிமிடங்கள் கழித்து சென்றுவிட்டான்.

'சே..முகமே தெரியுதில்லையே!' முகத்தை மூடிய தலைக்கவசம் அணிந்திருந்ததால் மனதால் அவனை திட்டிக்கொண்டாள்.



அந்த வீட்டில் இருக்கும் இளம் பெண் வாடகைக்கு குடி வந்து மூன்று மாதங்கள். அவள் கணவன் காலையில் வேலைக்குச் சென்றால் இரவாகும் வீடு சேர. ஒரே தம்பிக்கும் வெளிநாட்டில் வேலை. இவையெல்லாம் அவள் வந்த முதல் நாளிலேயே அவளிடமிருந்து தெரிந்து கொண்டவை.

'யாரிந்த முகமூடி?கடந்த ஒருமாதமாக ஏன் வருகிறான்..?அதுவும் அவள் கணவன் இல்லாத பகலில் மட்டும்..? யோசனை நீண்டது.
'ஆண்டி'முன் வீட்டுப்பெண்ணின் குரல் அது. ஜன்னல் விட்டு வாசலுக்கு நகர்ந்தாள்..
'திடீரென வீட்டை கேட்டதால் வேறு வீடு பார்த்துவிட்டேன்.சாவியை உங்களிடம் கொடுத்தால் சரி என்றார்கள்.'

நேற்று ஊருக்கு வெளியே இருக்கும் தன் மகனின் வீட்டுக்குச் சென்றவள் இன்று மதியமே வீடு திரும்பியதால் காலையில் வீட்டுச் சாமான்களை ஏற்றி அனுப்பிய விடயம் தெரியாமல் போனது ஹமீதாவுக்கு. அப்போது மீண்டும் அதே வண்டி வந்தது.

ஹமீதாவும் வீட்டு உரிமையாளரானவளும் பழங்காலத் தோழிகள்.தன் ஜன்னல் காட்சிகளை அவளிடம் படம்பிடித்துக் காட்டியதன் விளைவே இது என்பதை நன்றாகவே உணர்ந்தாள் ஹமீதா.

சாவியோடு சேர்த்து புன்சிரிப்பொன்றையும் வழங்கி விடைபெற்றாள் அந்த இளையவள். ஹமீதா உன்னிப்பாகப் பார்த்தாள். இந்த முறை அவன் தலைக்ககவசம் அணிந்திருக்கவில்லை.

மெல்லிய தாடிக்குள் அந்தப் பெண்ணின் ஜாடை மெலிதாகத் தெரிந்திட, அவள் தந்து சென்ற புன்னகை ஹமீதாவின் மனதை கீறிக்கொண்டிருந்தது.

## நடுத்தரவர்க்கம்

எந்த சமூகம் அடுத்தவர்களைப்பற்றி குற்றம் குறை கூறுவதில் இருந்து விடுபடுகின்றதோ அந்த சமூகம்தான் பண்பாடு உள்ளது என்று சொல்லலாம். நடுத்தரவர்க்கம் இந்தக் குற்றச் சுமைகளைத் தாங்கிக் கொள்கிறது. இதனால்தான் அது பயந்து இருக்கிறது. பயம் உள்ள இடத்தில்தான் நிரம்பப் பாவமும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கதை

மு.தயாளன்

# கரும்பலகை

கபிலனனின் மனதில் பாடசாலையில் ஏதோ பிரச்சினை வரப்போகிறதென்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. அதைப்பற்றிச் சிந்தித்தபடியே அறைக்கு வந்து சேர்ந்தான். பாடசாலைக்குச் சென்ற இரண்டாம் நாளே பிரச்சினை வந்துவிட்டமை கபிலனுக்கு என்னவோபோல்தான் இருந்தது.

அறையில் இன்னும் அவனது நண்பன் வரவில்லை. சகலதையும் மறந்துவிட்டு வருவதை நாளை பார்ப்போம் என்று எண்ணியவாறு அடுத்த அலுவலைப் பார்ப்பதற்கான வேலையில் இறங்கினான்.

கபிலன் பள்ளிக்கூடத்தில் படிப்பிப்பதோடு சில பிள்ளைகளுக்கு வீடுகளில் சென்றும் படிப்பித்தான். இன்று அவன் இரு வீடுகளுக்குச் செல்லவேண்டும். ஒன்று கமலினி மற்றது யோகச்சந்திரன்.

உடைகளை மாற்றிக்கொண்டு புறப்பட்டான். முதலில் அவன் போகவேண்டிய இடம் மாணவன் பெயர் யோகச்சந்திரன். அவர்களின் வீடு முருகன் பிளேசில் இருக்கிறது. நடந்துபோக எப்படியும் முப்பது நிமிடம் வேண்டும். கபிலன் பஸ்சில் ஏறுவதில்லை. வீண் செலவு என்பது அவன் எண்ணம்.

குறுக்குவழிகளால் முருகன் பிளேசுக்குச் சென்று வகுப்பெடுத்தான். அந்தப் பையன் நல்ல கெட்டிக்காரன். அவனுக்குப் படிப்பிப்பதில் சிரமம் இருப்பதில்லை. நல்ல குடும்பம். யோகச் சந்திரனின் அப்பா ஒரு அரசாங்க உத்தி யோகத்தர். உறவினர்கள் போலவே பழகிக் கொள்வார்கள். ஒரு மணித்தியாலம் படிப்பித்துவிட்டு அடுத்தது கமலி னியின் வீட்டிற்குப் போகவேண்டும்.

அந்த வீட்டுக்குப் போக மேலும் இருபது நிமிடங்கள் நடக்க வேண்டும். செருப்புத் தேயத்தேய நடப்பதிலே அவனுக்கு ஒரு இன்பம். கமலினியின் வீடு றொக்சி தியேட்டருக்கு அருகாமையால் செல்லும் வீதியால் செல்ல வருகிறது.

இவர்களும் நல்ல குடும்பம். கமலினியின் தகப்பனும் அரசாங்க உத்தியோகத்தர். நடுத்தரக் குடும்பம். கமலினியும் சராசரியகப் படிப்பாள். அவளுக்குக் கணிதமும் பௌதீகமும் படிப்பிப்பான்.

அங்கு சென்றதும் களைத்துப் போயிருந்தான். தேனீர் கொடுத்தார்கள். குடித்து களைப்பை ஆற்றிக் கொண்டு



படிப்பித்தலை ஆரம்பித்தான்.

கமலினியின் சில நடத்தைகள் கபிலனுக்குப் பிடிப்பதில்லை. கமலினி படிப்பதைவிட கபிலனை ரசிக்கவே விரும்பினாள். இது சாடைமாடையாகக் கபிலனுக்கும் புரிந்திருந்தது. இதனை வளரவிடக் கூடாது என்று மனதுள் நினைத்துக் கொண்டான்.

சில சமயம் ஆசிரியத் தொழிலின் சிறப்பு பற்றி அவளுக்குச் சொல்லாமல் சொல்லியும் வைத்தான். அவன் சொல்வதெல்லாம் அவளுக்கு அவனைப்பற்றி மேலும் மேலும் உயர்வாகவே எண்ண வைத்தது. பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துத்தன் கடமையைச் செய்தான். இன்னும் இருமாதங்கள்தானே உள்ளது. அதற்குப்பின் இங்கு வரத்தேவையில்லை என்று மனதுள் நினைத்துக் கொண்டான். ஒருவாறாக வகுப்பை முடித்துவிட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தயாளன்

புறப்பட்டான். அவன் புறப்பட்டதும் அவனை அனுப்பிவிட்டு அவன் நடந்து போவதை பின்னால் நின்று ரசிப்பாள் கமலினி. இது கபிலனுக்கும் புரியும். ஆனால் திரும்பவே மாட்டான். அவள் பார்ப்பதனாலோ என்னவோ அவனுடைய கால்கள் இடறும். ஒருவாறு சமாளித்துக் கொண்டு பிரதான வீதிக்கு வந்தபின்தான் நிம்மதியாக இருக்கும்.

பிரதான வீதியில் வரும் வழியில் மொகமடியா சாப்பாட்டுக் கடை இருக்கிறது. இந்தக் கடைதான் அவனின் இரவுச் சாப்பாட்டுக் கடை. கொத்து றொட்டிக்குப் பெயர்போன கடை. இந்தக் கடையில் கொத்து றொட்டி தனிச்சுவையாக இருக்கும். இந்தக் கடையில் சாப்பிட்டுவிட்டு அவன் அறைக்கு வந்தபோது இரவு பத்து மணியாகிவிட்டது.

அவன் நண்பனும் அறைக்கு வந்து விட்டிருந்தான். கபிலன் யோசனையோடு வந்திருப்பதைக் கவனித்த நண்பன் " என்ன மச்சான் ஏதும் பிரச்சினையே? முகம் வாடிக் கிடக்குது." என்றான்.

கட்டிலில் சாவதானமாக இருந்த கபிலன் ஒரு பெரு மூச்சை விட்டவாறு " பிரச்சினைதான் மச்சான்." என்று கூறிவிட்டு பாடசாலையில் நடந்த பிரச்சினைகளைக் கூறினான்.

" அட இதுக்கேன் கவலைப்படிறாய். நீ சரியானதைத்தானே கூறியிருக்கிறாய். அதிபரின்ரை ஒத்துழைப்பு இருக்கேக்கை ஏன் பயப்பிடிறாய். துணிந்து செய். உன்ரை அணுகுமுறை எனக்கும் பிடிச்சிருக்கு மச்சான். எனக்கு இப்பவும் எங்களுக்கு இரசாயனம் படிப்பிச்ச குழறி பொன்னம்பலத்தார்தான் கண்ணிலை வாறார். அவர் எண்டைக்காவது தயாரிச்சுக் கொண்டு வாறவரே. வந்தவாக்கிலை என்னத்தையோ படிப்பிச்சிட்டுத்தானே போறவர். செய்முறைக் கொப்பியிலை கையெழுத்து வாங்க அவரின்ரை வீட்டுக்கு வெங்காயம் கொண்டு போன கதை ஞாபகம் இருக்கே" என்று அவன் நண்பன் சுந்தரேசன் கூற கபிலன் விழுந்து விழுந்து சிரித்தான்.

" அதென்னெண்டு உந்த ஐடியாவெல்லாம் உனக்கு வருகுது மச்சான்?" என்று சுந்தரேசன் கேட்டான்.

" இல்லை மச்சான் நீ குழறியரைப்பற்றி ஞாபகம் வைச்சிருக்கிற மாதிரி நான் ஏப்பிரகாம் மாஸ்டரைப்பற்றி ஞாபகம் வைச்சிருக்கிறன். நீ அவரிட்டைப் படிக்கேல்லை. கணிதம் படிப்பிக்கிறதிலை அவர் புலி. ஒரு வகுப்புக்கை வரேக்கை என்ன படிப்பிக்கிறதென்ற தயாரிப்போடைதான் வருவார். பாடம் முழுமையும் கணித மழையாகப் பொழிஞ்சு எங்களைத் திக்குமுக்காட வைச்சுப் போடுவார். இப்ப நினைக்கவும் சந்தோசமாக இருக்குது. ஆசிரியத் தொழில்பற்றி மேல் நாட்டு முறையள் பற்றியும் வாசிச்சன். அதுதான்" என்றான் கபிலன்.

" நானும் கேள்விப்பட்டிருக்கிறன். ஏபிரகாம் நல்ல ரீச்சர்தான்" என்றான் சுந்தரேசன்.

" பள்ளிக்கூடப் பிரச்சினையைச் சமாளிச்சிடலாம் வேற ஒரு பிரச்சினைதான் மனதைக் குடையுது" என்றான் கபிலன்.

"அதென்ன மச்சான் அப்பிடியொரு பிரச்சினை?" என்று கேட்டான் சுந்தரேசன்.

" நான் றொக்சித் தியேட்டருக்குக் கிட்ட ஒரு ரியூசனுக்குப் போறது தெரியும்தானே." என்ற கபிலன் தொடர்ந்து " அதுதான் கொஞ்சப் பிரச்சினையாயக் கிடக்குது மச்சான். சிலவேளை நான் பிழையாய் நினைக்கிறேனோ என்றும் தடுமாற்றமாயக் கிடக்குது" என்றான்.

" ஏன் மச்சான் என்ன நடந்தது?" என்று கேட்டான் சுந்தரேசன்.



" அந்தப் பிள்ளையின்ரை போக்கு ஒரு மாதிரிக் கிடக்குது. அது என்னை விரும்புது போலை. வகுப்பு முடிஞ்சு வரேக்கை என்னை அனுப்பிப்போட்டு நான் மறையும் வரை பார்த்துக் கொண்டே நிற்குது" என்றான் கபிலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தயாளன்

" ஏன் மச்சான் அந்தப் பெட்டையிலை உனக்கேதும் ஐடியா இருக்குதே?" என்று நேராகவே கேட்டான் சுந்தரேசன். சுந்தரேசனின் இந்தக் கேள்வியால் தடுமாறிப்போன கபிலன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு " சீச்சீ..என்ன விசர்க் கதை கதைக்கிறாய்.. அவள் என்ரை மாணவியடாப்பா.. ஒரு மாணவி ஆசிரியனுக்குப் பிள்ளை மாதிரி.." என்றான் கபிலன்.

" அது சரியடாப்பா..உப்பிடிச் சொன்ன கனபேரை எனக்குத் தெரியும். உனக்குத் தெரியுமே எங்கடை பள்ளிக் கூடத்திலை படிப்பிச்ச சரித்திர ஆசிரியரும் தமிழ் ஆசிரியையும் ஒன்றுவிட்டு சகோதரங்கள். எல்லா உறவுகளும் சூழ்நிலையாலைதான் தீர்மானிக்கப்படுகின்றன மச்சான். இதிலை அது தவறு இது தவறு என்றெல்லாம் சொல்ல முடியாது மச்சான். அது சரி பெட்டை வடிவோ?" என்றான் சுந்தரேசன்.

" வடிவான பிள்ளைதான்.. எனக்கு அப்பிடியெல்லாம் இல்லை மச்சான்." என்று ஒப்புவித்தான் கபிலன்.

"சரி.. பிரச்சினை என்டால் ரியூசனை விட வேண்டியதுதானே. பெட்டையின்ரை நடவடிக்கைகளைப் பார்த்தால் அவள் உன்னை விரும்புறாள் போலை இருக்குது. ஒரேவழி ரியூசனை விடு" என்றான் சுந்தரேசன்.

" அதுவும் முடியாது மச்சான். பரீட்சைக்கு இன்னும் ஒரு மாதம்தான் கிடக்குது. இந்த நேரத்திலை நான் விடிறது அவ்வளவு நல்லதில்லை." என்றான் கபிலன்.

" அப்ப நான் ஒண்டும் செய்யேலாது. நீ பட்டுத்தான் தெளியவேணும்" என்று கதைக்கு ஒரு முற்றுப் புள்ளியை வைத்தான் சுந்தரேசன்.

" மற்றது மச்சான்..என்ரை தங்கச்சி உன்ரை பள்ளிக் கூடத்திற்கு கிழமையிலை ஒரு நாளைக்கு பயிற்சிக்கு வரலாமோ என்று கேட்கிறாள்." என்று சுந்தரேசன் கூறினான்.

" மச்சான் நான் போயே இன்னும் ஒரு கிழமையாகவில்லை. அதற்குள்ளை நான் என்னெண்டு கேட்கிறது. எதுக்கும் நாளைக்கு அதிபரிட்டைக் கேட்டுப் பார்க்கிறன்." என்று கூறினான் கபிலன்.

அப்போதுதான் மேசையில் கபிலனின் பெயருக்குக் கடிதம் ஒன்று வந்திருப்பதைப் பார்த்தான்.

" ஓம் மச்சான் வீட்டுக்கார அன்ரி கொண்டுவந்து தந்தவ. மறந்து போனன்" என்று சுந்தரேசன் கூற கடிதத்தை எடுத்த கபிலன் கடிதவுறையின் மறுபக்கத்தைப் பார்த்துவிட்டு " "ம் அப்பரிட்டை இருந்துதான்." என்று கூறியபடி கடிதத்தைப் பிரித்தான்.

கடிதத்தில்

அன்புள்ள மகனுக்கு

இவ்விடம் நானும் அம்மாவும் சுகமேயுள்ளோம். நாட்டு நிலைமை நல்லாக இல்லை. ஒவ்வொரு நாளும் புதுப்புதுப் பிரச்சினைகள் உருவாகின்றன. ஏன் என்று புரியவில்லை. படித்துக் கொண்டிருக்கும் இளையவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் அல்லது காணாமல் போய்விடுகிறார்கள். நல்லவேளை நீ கொழும்பில் வேலை கிடைத்து இருப்பது. நான் மாற்றம் பெற்று உவ்விடம் வந்து உன்னொடு இருக்கலாமோவென அம்மாவும் நானும் யோசிக்கிறோம். மாற்றம்பற்றி எம்பியுடன் கதைத்துள்ளேன். அத்தோடு உனக்கும் கல்யாண வயது வந்து விட்டது. அது சம்பந்தமாகவும் நானும் அம்மாவும் தினமும் கதைக்கிறோம். உன்னுடைய அபிப்பிராயத்தையும் எழுது.

உன்னுடைய பல நண்பர்கள் திடீரெனக் காணாமல் போய்விட்டார்கள். அவர்கள் பொலிசாரிடம் அகப்பட்டுக் கொண்டார்களா அல்லது இயக்கங்களோடு இணைந்து விட்டார்களா எனப் புரியவில்லை. உவ்விடத்தில் நீ கவனமாக இருக்கவேண்டும். சுந்தரேசனையும் கேட்டதாகச் சொல்லவும்.

இப்படிக்கு

அப்பா

என்றிருந்தது. சுருக்கமாக சுந்தரேசனுக்கு கடிதத்தில் உள்ளதைக் கூறினான். " என்ன மச்சான் கொப்பர் வரப்போறார்போலைக் கிடக்குது" என்றான் சுந்தரேசன்.

" பார்ப்பம் மச்சான்.. வரட்டுமன் நல்லதுதானே.. மாற்றங்குடுக்கிறாங்களோ தெரியாது" என்றான் கபிலன்.

" கொப்பருக்குச் செல்வாக்கிருக்குது. எப்படியும் எடுத்துப் போடுவார்.. எதுக்கும் இப்பவே வீடுபார்க்கத் தொடங்கு" என்றான் சுந்தரேசன்.

" சரி மச்சான் படுப்பம்" என்று கபிலன் கூறவும் இருவரும் விளக்கை அணைத்துவிட்டு படுக்க ஆயத்தமாகினர்.

படுக்கைக்குப் போன கபிலனுக்குத் தூக்கம் வர மறுத்தது. அவனுடைய நினைவெல்லாம் நாளை பாடசாலையில் வரப்போகும் பிரச்சினைகள் பற்றியதாகவே இருந்தது. அவனைப் பொறுத்தவரையில் எப்படியும் பள்ளிக்கூடத்தில் தான் ஒரு சாதனையாளனாக மாறிவிட வேண்டும் என்பதே. இப்படியே நினைத்துக் கொண்டு தூங்கிவிட்டான்.

( இன்னும் வரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாவெளியூர் ஜெஜ-தர்மா.

# தூவானம்



பொழுது மதியத்தைக் கடந்து கொண்டிருந்தது. இரண்டு நாட்களாகப் பழுதடைந்திருந்த எனது கையடக்கத் தொலைபேசியை, இரண்டு நாட்களாகப் பெய்த தொடர்ச்சியான மழையினால் திருத்தக் கொடுக்க முடியவில்லை. இன்று காலையில் இருந்து மழை வெளித்திருந்தது. ஆயினும் மப்பும், மந்தாரமுமாக இருந்தது.

'பெற்றோல்' தட்டுப்பாட்டால் 'சைக்கிளை' எடுத்துக் கொண்டு "நியாஸ் போன் திருத்தகம்" நோக்கிப் புறப்படத் தயாரானபோது. "மழைக்குணமாக்கிடக்கு... குடையைக் கொண்டுபோங்கோ" என்கின்ற மனைவியின் கட்டளைக்கு "மழையில்லாத நேரம் குடையக் கொண்டு போயிற்று வரயிக்க மழை இல்லாட்டி, குடையை மறந்து போய் விட்டிற்று வந்திற்று, உன்னட்டப் பேச்சு வேண்டேலா" என்றபடி புறப்பட்டேன்.

சாணியும்.... சகதியுமாகக் காட்சி தரும் வீதி, மழைநீரினால், சுத்தமாகக் கழுவப்பட்டிருந்ததைக் காண, மனதிற்கு நிறைவாய் இருந்தது. காற்றினால் அள்ளுண்டு மரங்களில் படிந்திருந்த 'றோட்டுக்கிறேவல்' புழுதி காணாமற் போனதால், மரங்கள் யாவும் பச்சைப் பசேல் என்று கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தந்தது.

போன் திருத்தும் கடையின் வாசலை நெருங்கினேன். என்னைக் கண்டதும் கடை உரிமையாளர் எழுந்து "சலாம் அலைக்கும்... வணக்கம்" என்று கூறி வரவேற்றார். பதிலுக்கு நானும் "வணக்கம்" தெரிவித்துவிட்டு, உள்ளே சென்றேன். கதிரை ஒன்றைத் தந்து, அமரும்படி சொன்னார். அமர்ந்து கொண்டேன்.

"சொல்லுங்கள் என்ன விசயம்"?

"ஒண்டுமில்ல...இரண்டு நாளா இந்தப் 'போன்' வேலை செய்யல்ல அதுதான்" என்றபடி போனை அவரிடம் கொடுத்தேன்.

அதைப் பெற்றுக்கொண்டவர், கண்ணாடியினால் சுற்றி அடைக்கப்பட்டிருந்த அறையொன்றினுள் நுழைந்து, கதிரையில் அமர்ந்துகொண்டு, திருத்த வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வாலிபனிடம் கொடுத்தார். அவன் எனது போனைப் பெற்றதும் மளமளவென்று கழட்டத் தொடங்கினான்.

'விலை கூடிய போன், முப்பத்தையாயிரத்திற்கு வேண்டியது. போன் திருத்தத் தொடங்கியவனுக்கு ஒரு இருபது வயசுதான் இருக்கும் உந்தச் சின்னப்பொடியன்.... திருத்துவானோ? இன்னும் பழுதாக்கிப் போட்டு.. திருத்தேலாது எண்டு சொல்லித் திருப்பித் தந்திருவானோ' என்று மனது அடித்துக்கொண்டு இருந்தது.

அரை மணி நேரம் கழிந்திருக்கும்

"இந்தாங்கோ ஐயா" என்றபடி,கடை முதலாளி என்னிடம் போனைத் தந்தார். இயக்கிப் பார்த்தேன் . நன்றாக வேலை செய்தது.

'பெடியன் கெட்டிக்காரன்தான். கடுகு சிறுசு எண்டாலும் காரம் பெருசு' மனதிற்குள் அவனைப் பாராட்டினேன்.

"எவ்வளவு முதலாளி?"

" நூறு ரூபாய்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாவெளியூர் கெஜ-தர்மா.

மகிழ்வுடன் கொடுத்துவிட்டுத் திரும்பினேன்.

"வாற வழியில,... குணத்தின்ர கடையில.... பருப்பும் வெள்ளைப் பூடும், மறந்திராம வேண்டிற்று வாங்கோ" என்று மனைவி சொன்னது நினைவுக்கு வரவே குணத்தின் கடையை நோக்கிப் பயணித்தேன். மழை மெல்லத் தூற ஆரம்பித்தது. "குடையைக் கொண்டு வந்திருக்கலாம்.. பறவாயில்லை மழை உரக்கமுதல் போயிரலாம்" என்று எண்ணியபடி சைக்கிளை வேகமாக மிதித்தேன். குணத்தின் கடை வாசலை நெருங்கியதும் மழை சற்று அதிகரித்தது. முன் விறாந்தாவில் போய் நின்றேன். ஓரமாக இருந்த கதிரை ஒன்றில் அமர்ந்திருந்து போன் கதைத்துக்கொண்டிருந்த முதலாளி குணம், என்னைப் பார்த்ததும் "நனஞ்சிற்றியள் போல.." என்றார்.

"ஓமோம்" என்று பதில் சொல்ல... கடைக்குள்ளே நின்ற அவரின் மனைவி "வாங்கோ என்ன வேணும்"? என வினாவினார்.

"அரைக்கிலோ பருப்பும், இருநூறு கிராம் பூடும்" என்றேன். அவற்றினை எடுத்து நிறுத்து, பையில் போட்டுத் தந்தார்.

மீண்டும் விறாந்தையில் வந்து நின்றேன்.

குணத்தார், அதே கதிரையில் அமர்ந்தபடியே, போன் பேசிக்கொண்டிருந்தார். மழை விட்ட பாடில்லை. நான் தொடர்ந்தும் நின்றேன். கால் கடுக்கத் தொடங்கியது. கடைக்குள்ளே, இரண்டு கதிரைகள் சும்மா கிடந்தது.

"உந்த மனிசன் எனக்கொரு கதிரையை எடுத்துத் தரலாந்தானே...அல்லது தான் இருக்கிற கதிரைய எனக்கு இருக்கத் தரலாந்தானே", என்று எண்ணிய எனக்கு கடந்தகால நினைவுகள் வரத்தொடங்கின.

" ஓஹோ எங்கட ஆக்கள் கதைப்பினம், அந்தக் காலத்தில குணத்தின்ர ஆக்கள் எங்கட வீடுகளுக்க வந்தா உள்ள எடுக்கிறதில்ல.. இருக்க கதிர கொடுக்கிற இல்ல ..நிக்க வைச்சுத்தான் கதைக்கிறதெண்டு, அதுதான் ... என்ன நிக்கவைச்சுப் பழி வாங்கிறாரோ"... என்று எண்ணிய மனம், மறுகணம் " ச்சேச்சே அப்படியிருக்காது, இந்தக் காலத்தில அப்பிடி எல்லாம் இல்லைத்தானே ..அது மட்டுமல்ல, நான் உந்த வேற்றுமைகள் பார்க்கிறதில்ல எண்டு குணத்துக்கு நல்லாத் தெரியுந்தானே"

பாழாய்ப்போன மனசு பழசையெல்லாம் ஏன் எண்ணுது ....?

மழை ஓய்ந்து கொண்டு போகிறமாதிரித் தெரிந்தது.

"குணமண்ணே! மழை விட்டிற்று.. வரப்போறன்" என்றேன்.

குணத்தார் கதிரையின் பின்னால் இருந்த ஊன்றுகோலை எடுத்து ஊன்றியபடி எழுந்து நின்று, இப்போ எனக்கு முந்தி மாதிரி, திடீரென்று எழும்பேலா.. கனநேரம் நிக்கேலா.. ம்..ம்...வயசும் அறுபதுக்கு மேலாகுது" என்றவர்

"மழை விட்டாலும் ..தூவானம்..கொஞ்சம் அடிக்குது ..இருந்து போங்கோவன்" என்று கூறியபடி தானிருந்த, கதிரையைக் காட்டினார்

நன்றி கூறி அமர்ந்தபடி.......

"ஆம், உண்மைதான் மழை ஓய்ந்தாலும், தூவானமாய்...இன்னும் பழைய நினைவுகள் மனங்களில்.. இதுவும் விரைவில் ஓய்ந்துவிட வகை செய்ய வேண்டுமென எண்ணலானேன்.

# உறவு

என் மனைவி உயிரோடு இருக்கும்வரை நான் இதைப் பற்றி நினைக்கவேயில்லை. நாங்கள் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். மிகப் பிரியமாக இருந்தோம். வழிதவறிப்போகக் கூடிய பல கட்டங்கள் வந்தாலும் அலைகள் மேல் எழுந்த வாரியாக மேல் தண்ணீரில் நீந்துவது போல்தான் இருந்தது. மிக ஆழத்தில் இல்லை. இதனால் எங்களுக்குத் தப்பான அபிப்பிராயம் ஏற்படவேயில்லை. தீவிரமான மனத் தாங்கல் ஏற்பட்டால்தான் தப்பான அபிப்பிராயம் ஏற்படும்.

நான் அறுபத்தெட்டு வயதைக் கடக்கும்போது அவள் இறந்துவிட்டாள். சாதாரண நோயினால்தான் இறந்தாள். நான் முறிந்தே போனேன். அந்த வயதில் தைரியம் இழந்து அழுதேன். இராத்திரியின் தனிமையை நினைத்து அழுதேன். அப்பொழுதுதான் அவள் யார் என்பது எனக்குத் தெரிய வந்தது....

**அர்த்தநாரீஸ்வரர் நாவல்**

**விஷ்ணு பிரபாகர் தமிழில்: சுந்தரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைலாப்பொட்டி

ஏ.பீ. முகம்மது

வயசுபோன எழுத்தாளன் தன்ர பழய பைல்கட்டப் பெரட்டிக் கொண்டிரிக்கிறான். அவனுக்கு ஒரு சிறுகத அகப்பட்டிச்சி. அது அவன் எழுதின கத. பைலுக்க அத மாறி வெச்சதால வெளியால ஒரு எடத்தயும் போகல்ல. எத்தினயோ தெரம் தேடியும் அவன்ட கைல அது கெடைக்கல்ல. முப்பத்தஞ்சி நாப்பது வருசமா அசயாம இருந்துபோட்டு இப்ப திரும்பி அவன்ட கையில அது கெடச்சிரிக்கி. தைலாப்பொட்டி ண்ட தலைப்பில மீரான்ட உதுமான் வாற அந்தக் கதயத்தான் நீங்க இப்ப வாசிக்கப் போறீங்க.



தாய்க்குச் சுகமில்ல யெண்ட வெசயம் கெடச்ச ஒடன சுறுக்கா வெளிக்கிட்டு கல்முன டவுனுக்கு வந்து ரெண்டு கட்டக்கி அங்கால இரிக்கிற சாய்ந்தமருதில இருபத்தாறாம் கட்டையடி பஸ்ஸால எறங்கி தாயூட்டுக்கு வந்து சேந்தவன் தான் மீரான்ட உதுமான். நரச்ச தாடி. தலயில நடுவில வழுக்க மொட்ட. 'வந்திட்டியா எண்டு ஈனக் கொரல்ல கேட்டுப் போட்டு மனுசி கண்ண மூடிட்டா.

பாவம் உதுமான். தகப்பன்ட மொகத்தயும் கடசியா பாக்கக் கெடைக் கல்ல. அந்தக் கவலயோட வெளியூரில அவன்ட காலம் பெய்த்து. கடசிக் கட்டத்தில வந்து தாய பாத்ததால சொட்டு நிம்மதி. உதுமான்ட ஒடம்புல ரெத்தம் கொதிக்கிற காலத்தில ஊரில இருந்த ஒரு பிள்ளயோட தொடுப்பு வச்சிருந்தவன். பொறகு தாலி கட்டாம தாயும் கண்டுமா அவள ஊட்ட கூட்டிக்கிட்டு வந்தவனாம். அவன்ட தகப்பன்காரன் கரவாப்பத்துப் போடிய வங்கிசம்(வம்சம்). கணகாட்டான ஆள். ஒருக்கா அறுபதாமாண்டோ என்னயோ பாளிமெண்டுக்கு நடக்கிற பெரிய எலெக்சன் அந்த வருசத்தில ரெண்டு தெரம் நடந்தயாம். போன எலெக்சனுக்கு போளின்ல நிண்டு வோட்டுப் போட்டுட்டன். ரெண்டாந் தடவயா நான் வோட்டுப் போடமாட்டனெண்டு அந்த மனுசன் ஒத்தக் கால்ல நிண்டயாமெண்டு ஒரு கதயுமிரிக்கி. அவரு உதுமான ஊட்ட உட்டுத் தெரத்தயும் வெளியூரில போய் ஊர மறந்து குடும்பம் குட்டியா வாழ்ந்தவனெண்டு கௌவன் கெட்டயள் அவனப்பத்திக் கதைப்பாக. அவன்ட தாய் கண்ண மூடி இண்டயோட மூணு நாள். சொந்தக்கார ஆக்களும் மெள்ள மெள்ள கலஞ்சி பெய்த்தாக. இப்ப தாயுமில்ல. இன்னம் ரெண்டொரு நாள் போனா அவனும் தங்கச்சிர குடும்பமும் தான்.

தங்கச்சிக்கு ஒதவுறதுக்காக உதுமான் வாசலக் கூட்டிப் பெருக்கி குப்ப கூளங்களச் சேத்து சீலம் பாய்க்குள்ள அள்ளி ஒரு மூலயில வெச்சான். வாழமடல், தென்னோலக் கிடுகு, சாம்பிராணிக் குச்சி கொழுத்த மண் நெறப்பின தகரப் பேணி. இதுகளப் போல கொஞ்ச சாமான் கெடந்திச்சு. அதயும் பொறக்கி வேலி ஓரத்துல போட்டான். கழுவி வெயில்ல காயப்போட்ட கட்டிலத் தூக்கிட்டுப் போய் ஊட்டுக்க வெச்சான்.

தனியா பொம்பிளயள் மட்:டும் பரிமாறுறதுக் கெண்டு ஊட்டுல ஒரு அற இரிக்கிம்.. பொம்பிளச் சாப்பூடுண்டுதான் அந்த அறயச் செல்லுவாக. மகள்ர கவனிப்புல அந்த அறைக்குள்ளதான் அவன்ட தாய்க்காரி இருந்தவ. இப்ப அதுக்குள்ள ஒருத்தரும் இல்ல. அங்க தலவாணிய வெச்சிச் சுருட்டின ஒரு பாய்க்கட்டு செவர ஒட்டினாப்போல கெடந்திச்சு. அதுக்கு மேல ஒரு பழய பனஓல விசிறி. டோர்ச் லைற்று ஒண்டும் இருந்திச்சி. ஒம்பதாம் நம்பருக்குள்ள கறுப்புப் பூன பாய்ர படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிக்கிற மூணு வெத்தி போட்ட லைற்று அது. புணிப்போட்ட சவ்வுப்பாய் ஒண்டு அசவுல தொங்கிச்சி. உறில தொங்கின மாதிரி ரெண்டு பான. ஒண்டுல சில்லறக் காசி கொஞ்சமும் மத்ததில தாள் காசி கொஞ்சமும் இருந்திச்சி. மூலயில ஒரு தைலாப்பொட்டி.

பழய காலத்தில சாமான் சக்கட்டுகள பத்திரப்படுத்தி வெச்சிரிக்கிறதுக்காக எல்லா ஊட்டிலயும் தைலாப்பொட்டி யொண்டு இரிக்கிறெண்டு ஆக்கள் கதப்பாக. அவன் மூலயில பாத்தது தாய் பாவிச்ச தைலாப்பொட்டியத்தான்.

அந்தத் தைலாப்பொட்டி முதிர மரத்தில செஞ்சது. நீளப்பாட்டுக்கு நாலு சாண். ரெண்டு சாண்ல அகலம். அகலப்பாட்டுக்கு ஏத்தாப்போல ஒசரம். தொறந்தா மூடி நிமிந்து அசயாம நிக்கிம். அதுக்காக பொட்டியும் மூடியும் சேந்திரிக்கிற ரெண்டு பக்கத்துக் கக்கத்திலயும் உருக்குத் தகட்டால முட்டுச் செஞ்சு பொணச்சிரிப் பாக. சின்னொரு கள்ளறையும் இரிக்கும். வாப்பா மௌத்தாகி ம்மா 'இத்தா'க் கடமையில பொம்பிளச் சாப்பூட்டுக்க இருந்தா. அந்நேரம் அந்தப் பொட்டிக்கு மேல இருந்துக்கிட்டு ம்மாக்கிட்ட மனவருத்தப்பட்டுக் கதச்சது அவனுக்கு நெனப்பு வந்திச்சி. பொட்டிய தொறந்து பாத்த அவனுக்கு அப்பதான் விளங்கிச்சி தாய்ர ஒலகமே அந்தத் தைலாப்பொட்டிதானெண்டு.

மொதல்ல அவன்ட கண்ணில பட்டது உடுபொடவதான். சோமன் பொடவயொண்ட மடிச்சி வெச்சிருந்தா. லாம்பிச்சம் வேர மணமும் காக்கா முட்டர மணமும் கமகமண்டு வீசிச்சு. கலியாணம் , காச்சி, புதினமெண்டு வந்தா சோமன், பச்சவடம், முறிண்ட பொடவகள அவ அந்தக் காலத்தில உடுத்துக்கிட்டுப் போறதாமெண்டும் காசிக்கார ஆக்கள் மட்டும்தான் இப்பிடி நல்ல உடுப்புகள வெச்சிரிப்பா களாமெண்டும் அவன் அந்தக் காலத்தில கேள்விப் பட்டுமிரிக்கான். பச்சவடம் , முறியெல்லாம் இப்ப எங்கெண்டு தெரியா.

சோமன் பொடவயப் பாத்திட்டு தங்கச்சியக் கூப்பிட்டுக் காட்டினான். சாயம் போகாம இப்பயும் புதிசி மாதிரி இருந்திச்சி. காஞ்சிபொரம் பட்டு, கல்குத்தா, காசிமீருண்ட பேரிலயும் திரும்பிப்பாரு தேன்நெலவு, ஜப்பான் ஜோஜெட்டுண்ட பேரிலயும் செல பொடவகள சும்மா நாள்ள அவ உடுத்தவ ண்டு தங்கச்சி வேறயா வௌக்கினா. அந்தப் பொடவகளயும் பொட்டிக்க காணல்ல. ஆனா அவன்ட மனசுக்குள்ள அந்தப் பொடவகள் வந்து தாப்புக்காட்டிப் போட்டு போனது மொகத்தில விளங்கிச்சு. பாவாட ஒண்டு செவப்பு நெறத்தில பொட்டிக்க இருந்திச்சு. கால்மாட்டில அதுக்கு வெள்ளயால ரேந்த புடிச்சிருந்திச்சி. அவட பாவாட எல்லாத்துக்கும் ரேந்த புடிச்சிரிக்குமெண்டு தங்கச்சிக்காரி அவனுக்கு தெரியப்படுத்தினா. பொல பொலெண்டு விடியக் கொள்ளம்மா குளிச்சிட்டு மாதுளம் செடில சிவப்புப் பாவாட ஒண்ட காயப் போடுறத அவன் பல தடவ பாத்திரிக்கான். சீத்தத் துணில தச்ச பாவாட அது. இஞ்ச பொட்டிக்க இரிக்கிறது சாமூஸ் துணில தச்சது.

பளயகாட்டு ரெட்டமூட்டுச் சாரணொண்டும் சரிகப் பட்டு மடிப்புச் சால்வயொண்டும் பொட்டிக்க இருந்திச்சி. வாப்பா பாவிச்ச உடுப்புப் பொட்டகத்த இப்ப தங்கச்சி பாவிக்கிறதால வாப்பாட சாரணயும் சால்வயயும் பத்திரமா எடுத்து தைலாப் பொட்டிக்க வெச்சிரிக்காண்டது வௌங்கிச்சி. தொப்பி போடாத முஸ்லிம் ஆக்கள் தலயில கட்ர பச்ச நெறச்சவுக்கமொண்டு சங்குப் படத்தோட பொட்டிர அடில சோக்கா மடிச்சாப்போல இருந்திச்சு.

கைப்பிரக் கட்டி வார மஞ்சள் நெற சின்னப் பொட்டியொண்டும் தைலாப் பொட்டிக்க இருந்திச்சி. அந்தச் சின்னப் பொட்டிக்கயும் நாலஞ்சி சாமான் வெச்சிருந்தா. வெள்ளியால செஞ்ச கால்ல போர கரண ஒரு சோடி சீலயால சுத்தி அதுக்குள்ள இருந்திச்சி. எப்ப வெளிய போனாலும் அவட கால்ல கரண இரிக்கும். கண் குளித்தியா இரிக்கணுமெண்ட துக்காக அவ கண்ணில சுறுமா அரச்சிப் போடுவா. அந்த சுறுமாக் கல் ஏழெட்டு தாளுக்க வெச்சிச் சுத்தினாப்போல இருந்திச்சி. பூட்டுசிக் கோருவ ஒண்டயும் கண்டான்.

சந்தணக்கட்ட ஒரு துண்டு கள்ளறைக்குள்ள கெடந்திச்சி. காச்சல், தலயிடி, அம்மாள், கூகக்கட்டு. இப்பிடி என்ன வருத்தம் வந்தாலும் கெணத்துக் கொட்டுல பன்னீர ஊத்தி சந்தணக் கட்டய அரச்சி வார சந்தணக் கொழம்ப நெத்திலயும் நெஞ்சிலயும் பூசினா வருத்தம் இருந்த எடம் தெரியாம பறந்து போறத அவன் பல தடவ அநுபவத்தில கண்டிரிக்கான். ஆஸ்பத்திரிக்கிப் போய் மருந்தெடுக் கயும் காசிக்கி மருந்தெடுக்கயும் சனம் பழகினதால இப்ப ஒருத்தரும் சந்தணக் கட்டய வருத்தத்துக்கு பாவிக்கிறெல்ல. தேஞ்சி போய் மணம் மாறாம அந்த சந்தணக் கட்டய தைலாப் பொட்டிக்க கண்டது அவனுக்கு பெரிய புதுனமா இருந்திச்சு.

ரெண்டு மூண்டு பட்டுல நூல் சுத்தின மாதிரி தையல் ஊசிய செருகின நூல்கட்ட ஒண்டும் பொட்டிக்க கெடந்திச்சு. குரும்பெட்டில தடிப்பான ஈக்கிலக் குத்தி நாலஞ்சி நூல் கட்டய ஒண்டுக்க மேல ஒண்டா அடுக்கி வௌயாடின அவனுக்கு பொட்டிக்க அந்த நூல் கட்டயக் கண்டு இல்லெண்ட சந்தோசம் வந்த மாதிரித் தெரிஞ்சிச்சி. அறுணாக் கொடிக் கவுறு ஒரு கட்டு வெரல் தடிப்பத்தில வேறயா கெடந்திச்சு. சின்னக் கீசா ஒண்டுக்குள்ள அரக்கூடு ஒண்டு இருந்திச்சு. பொறங்கை அளவில பித்தளத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.பீ. முகம்மது

தகடொண்ட எடுத்து அதில அறுபத்தி நாலு இல்லாட்டி நாப்பத்தொம்பது சதுரப் பொட்டியக் கீறி அதுக்குள்ள குர்ஆன் எழுத்து சிலத எழுதி பொறகு அத சுறுட்டி எடுத்து அறுணாக் கொடியால மடிச்சிக்கட்டி அரக்கூடு செஞ்சிரிப் பாக. செல ஆக்கள் அத கைல மொழங்கைக்கு மேல இல்லாட்டி இடுப்புல கட்டி இரிப்பாக. கழுத்தில தொங்கப் போட்டும் இரிப்பாக. பே பெசாசி இல்லாட்டி செய்த்தாண்ட பெரச்சின ஒண்டும் வெராமத்தான் அரக்கூடு கட்ர. சின்ன வயசில அவண்ட இடுப்பில ஒரு அரக்கூடு இருந்த. அத நெனச்சிப் பாத்தான்.

மக்காவுக்குப் போய் வரக்கொள்ள தாய் கொண்டந்த அத்திக் கீசாக்குள்ள அடில கொஞ்சம் அத்தி இருந்திச்சி. தொறந்து மோந்து பாத்தான். சொட்டு மணமும் போகல்ல. என்ன புதினமெண்டு நெனச்சிக்கிட்டான்.

உதுமான்ட மனசில ஒட்டினெண்டா பொட்டிக் குள்ள இருந்த பொத்தகங்கள்தான். 'சேவல் பாட்டு', 'பெரிய எழுத்து நல்லதங்காள் கதை', 'தலைப்பாத்திகா', 'வீட்டில் பன்னீர் செய்வது எப்படி எண்டு எழுதின செல பொத்த கங்களயும் வேற செல பொத்தகங்களயும் கண்டான். சேவல் பாட்டுங்கிற பொத்தகத்த விரிச்சிப் பாத்தான்.

**"தங்கத்தினால் சலங்கை கட்டி**
**தரையில் விட்ட சேவல்**
**தரையில் விட்ட சேவல்**
**எந்தன் சேவல் போன இடம்**
**எனக்குத் தெரியாதே**
**எனக்குத் தெரியாதே"** எண்ட பாட்டு மொதலாவதா இரிந்திச்சி. அவனப் படுக்க வெய்க்கிறத்துக்காக எத்தின நாள்தான் இந்தப் பாட்ட அவ கொரலெடுத்துப் பாடினயாம் எண்டத நெனச்சி நெனச்சி மனசுக்குள்ள கொளறினான். பெரிய எழுத்து நல்லதங்காள் கதப் பொத்தகத்திர மட்டையில பொண்டுகள் ரெண்டு பேரு ஒரலுக்குள்ள ஒலக்கயால குத்துர படம் போட்டிருந்திச்சு. படத்தப் பாத்து அவன் மனசுக்குள்ள என்னயோ கதைக்கிற மாதிரி தெருஞ்சிச்சி. தலப்பாத்தியாவில புதினம் ஒண்டிரிக்கி. பொம்பிளயளுக்குத் தேவயான புத்திமதிய குர்ஆன் எழுத்தால தமிழ்ப் பாசயில எழுதினதுதான் தலப்பாத்தியா. அத வெள்ளிக்கிளம மசண்டயாகின ஒடன ம்மா வெளக்குக் கொழுத்தி வெச்சி ஓதுவா. 'நீயும் சேந்து தலப்பாத்தியா ஓதுறது இண்டைக்கும் எண்ட கண்ணுக்கான் இரிக்கிண்டு தங்கச்சிக்கிட்டச் சென்னான். மத்தப் பொத்தகங்கள பொறகு பாப்பமெண்டு வேறயா எடுத்து வெச்சான்.

அதில ஒரு பொத்தகத்துக்குள்ள படம் ஒண்டி ருந்திச்சி. வாப்பாவும் ம்மாவும் இரிக்கிற படம் அது. முறுக்கு மீசயோட வாப்பா கதிரயில இரிக்காரு. தலயில துரிக்கித் தொப்பி. தோள்ள கர மடிச்ச சால்வ. மொக்காடு போட்டுக் கிட்டும்மா பக்கத்தில நிக்கா. அவன் சின்னப் பிள்ளயா இரிக்கக் கொள்ள கண்ணாடிப் பிரேம் போட்டு ஊட்டுச் செவரில அந்தப் படம் தொங்கினது அவனுக்குத் தெரியும். பொறகு அத அவன் காணல்ல. இப்ப பாக்கிறது அந்தப் படந்தான். அத ஊட்ட கொண்டுபோய் வெய்க்கணும் ண்டு மனசிக்குள்ள நெனச்சிக்கிட்டான்.

எவ்வளவு பொறுமதியான சாமானெல்லாம் இந்தத் தைலாப் பொட்டிக்க இருந்திரிக்கி இண்டத நெனச்சிப் பாத்தான். அந்தச் சாமானுக்குள்ள ம்மாட மொகம்தான் தெரிஞ்சிச்சி.


சாமான் எல்லாத்தயும் பழயபடி வெச்சி தைலாப் பொட்டிய மூடினான். அவனுக்கு தாய் தகப்பன நெனச்சி சலிப்பு வந்திச்சி. மூக்கச் சீறி எறிஞ்சி போட்டு நெத்தில இருந்த வேர்வய கைவெரலால வழிச்சித் தொடச்சான். முதுகக் கொஞ்சம் நிமித்தினான். சாப்புக்க வந்து கதிரயில சாஞ்சான். வெளிப்பக்கத்துக் கதவுட அடிப்பக்கம் வெயிலும் மழயும் பட்டு எறந்து கொட்டிங்கப் பாக்கிறத கண்டுக் கிட்டான். தங்கச்சிய கூப்பிட்டு கதவுட அடி பழுதாகப் பாக்குது. ஒரு துண்டு முதிரப் பலகய வாங்கி அத எணக்கி றெல்லியா? ண்டு கேட்டான். தைலாப் பொட்டில இரிக்கிற முதிரப் பலகத் துண்டுகளக் களட்டி இனித்தான் கதவ எணக்கணும் எண்ட தங்கச்சிர கதயக் கேட்டு உதுமான்ட கண்ணில தண்ணி வெரத் தொடங்கிச்சி. இப்பிடித்தான் தைலாப் பொட்டி ண்டஅந்தக் கத முடிஞ்சிச்சி. தைலாப் பொட்டியப் பத்தி இப்ப ஒருத்தரும் கதைக்கிறல்ல. எழுத்தாளன்ட நெலமயும்ப்பிடித்தான் எண்டு அத நெனச்சி அவன் ஒரு பெருமூச்சி விட்டான்.

> பல மனிதர்கள் புதிய உலகத்தைப் படைக்க
> புதிய மனிதனை உருவாக்க நினைக்கிறார்கள்.
> அதில் ஒரு கற்பனைச் சித்திரம் எப்படி
> இன்றைய மனிதனிடத்தில் குரங்கினுடைய
> அந்தத் திறமைகள் இல்லையோ அதே மாதிரி
> புதிய மனிதனிடத்தில் மனிதனுக்கு உண்டான
> தீவிர புத்திக் கூர்மை சக்திகள் இருக்காது.
> இந்தக் கற்பனைகள் எனக்கு விடுதலையின் வழி
> தென்படுகிறது.
>
> அர்த்தநாரீஸ்வரர் நாவலில் ரசித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்புச் சிறுகதை**

**அ. யேசுராசா**



# வெக்கங் கெட்டவர்கள்

'யேம்ஸ் கடைக்குக்' கிட்ட வருகையில் பூவரச மரத்தடியில் நண்பர்கள் நிற்பதை, யேசுதாசன் கண்டான். மெல்லியதாய்ச் சிரித்தபடி அவர்களருகில் சைக்கிளை நிற்பாட்டுகையில் " எப்பயடாப்பா வந்தனீ ?" என அல்போன்ஸ் கேட்டான்.

"ராத்திரித்தான்.." என்று முடிக்க முன்னாலேயே, யோண்பின்ரன் குறுக்கிட் டான்.

"மாஸ்ரர் இங்கயெல்லோ பெரிய விஷயமெல்லாம் நடக்குது." கொடுப்பிற்குள் சிரித்தபடி அவன் எப்பவுமே, அவன் இப்பிடித்தான் ஏதோ ஒன்றை, மேலும் சொல்லத் தயங்கிவனாய்..

"டேய், சொல்றா. பெரிய வெக்கம்" எமிலியூஸ் யோண்பின்ரலைக் கேலி யாய் வற்புறுத்தியபடி. கிறீஸ்துராசா உதட்டிற்குள் சிரிப்பு எழ, பின்னால் கைகட்டியவனாய் காலி னால் மண்ணைச் சீத்திய படி நின்றான். தள்ளி, 'வலை பொத்தியபடி' மண்ணில் இருந்த குலசிங்கமும் எழும்பி வந்தான்.

யேசுதாசனிற்கு ஒரே சஸ்பெண்ஸ் என்னவென்று விளங்காததில் ஒரே குழப்பபமாய்.

"என்ன விஷயம்.. நேர சொல்லுங்களன்" அறியும் ஆவலோடு கிறீஸ்துராசாவிடம் கேட்டான்.

"உமக்குக் கலியாணங்கேக்கினம் அதான்" கிறீஸ்துராசா சொல்லியதைக் கேட்டதில் யேசுதாசனிற்கு ஒருவித நூதன உணர்ச்சி பரவியது. கூச்சச் சிரிப்பும் முகத்தில் பரவுகையில் விடுப்பறியும் முனைப்பும் எழும்ப

"அப்பிடியா.. அப்ப சொல்லுங்களன், நாங்களும் அறியத்தானே வேணும்" என யோண் பின்ரனைப் பார்த்தபடி "கடையிக்குள்ள கதைக்கலா" மென எமிலியூஸ் சொல்ல யேம்ஸ் கடையின் உள்பக்கத்தில் போய், வாங்கில் அமர்ந்தார்கள். எமிலியூசே 'ரீக்கும்' ஒடர் பண்ணினான். யோண்பின்ரன் தயக்கத்தை விட்டவனாய் விஷயத்துக்கு வந்தான்.

"உங்கட மாமா செல்வநாயம் உம்மட்டக் கதைக்கச் சொன்னேர். காசு இருபதினாயிரம், பெட்டைக்கு நகை செபஸ்தியார் கோயிலடி வீடு தருவினமாம்.

"உம்மட விருப்பத்தக் கேக்கச் சொன்னேர்" நல்லது தானே . இப்ப எல்லா மாய் எழுபதினாயிரத்துக்குக் கிட்ட வரும். நல்ல இடம் சொந்தத்துக் குள்ள."

எமிலியூசும் சேர்ந்து வற்புறுத்தியபடி ' காசு பணங்களோடேயே இவங்கள், திருப்தி அடைவாங்கள். பண உடமையிலேயே, உறவுகளைக் கூட்டுகிற இந்த முதலாளித்துவ அமைப்பில்., அதனுடைய போக்கில் எடுபட்டுச் செல்லுகிறவங்கள், இவங்கள்'

பணத்தை, பணக்காரரைப் பெரிதாய் என்றுமே யேசு தாசன் நினைத்திருக்கவில்லை. மாறாய், வெறுப்பும் வஞ்சினமுந்தான் அவன் மனதுள், பெருகி வளர்ந் தபடி இருந்தன. தன்னுடைய கலியாணத்தின் மூலம் 'சம்மாட்டி'யென்றோ, 'குத்தகைக் காரனென்றோ' இருந்த ஊரப்பிரமுகர்குடும்பத்திலொன்றோடு கலந்துவிடும் சந்தர்ப்பத்தைப் பார்த்தும் அவன் காத்திருக்கவில்லை.

அவனுடைய எண்ணங்கள் தேடல்கள் எல்லாம் வேறாதிப் படுத்தியபடி, பரஸ்பரப் புரிந்து கொள்ளல்களோடும் கூடிய ஒரு உள்ளத்திற்கான தேடல்.., அவ்வாறான தேடலிற் சந்தித்துக் கொண்ட அவள். அவனுள் நினைவு மின்னல்கள் அடுக்கடுக்காய் வெட்டிப் பாய்ந்தன.

'பேராதனையில் ஒரு வருஷமாய் அவளுடன் அறிமுகங் கொண்டு பழகியபோதும், இரண்டு மூன்று மாதமாய் எழும்பத் தொடங்கிய ஆசை . ' சங்கமித்தா ஹோலில்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. யேசுராசா

வட்ட மேசைக்கு முன்னால் இருந்து கதைக்கையில் இரண்டொரு மாதமாய், நாக்கைக் கடித்து வெட்கத்தில் தலைசாய்த்த அவளின் கதைகள். நாணம் நிறைந்த முகத்தின் பின்னணியில் அந்தக் கண்களின் பிரகாசம்.'

'வக்கேசனிற்கு' வீட்டுக்கு வரச்சொல்ல அவனும் போன பொழுது அவளது குடும்ப நிலைமை இன்னும் நன்கு விளங்கியது. சின்னவீடு; வயதுபோன தந்தை, ஒரே அண்ணனில் தயங்கிய குடும்பம்.

அங்கு எதிர் பார்ப்பதற்கு ஒன்றுமில்லை; அவர்களிடமிருந்து அவனுந்தான் ஒன்றையும் எதிர்பார்த்திருக்கவில்லையே..! தடையாய் முன்கிடந்த சாதி; மதம் இரண்டையும் தாண்டவும் மனத்துள் வைரம் பாய்ந்து வந்தது.

'மலர்! நீர் உறுதிப்படுத்தினால், நானும் உறுதிப்படுத்துவேன்.'

"இதில் என்ன யோசிக்கக் கிடக்கு, சொந்தத்துக்குள்ள. ஓமெண்டு சொல்லுமன்."

யோண்பின்ரன் அவனது மௌனத்தைக் குலைத்தான். "நான் என்னண்டு சொல்லுறது... அவையள, வீட்ட கேக்கச் சொல்லுங்க." யேசுதாசன் தட்டிக் கழித்தான். அவர்களும் இரண்டு மூன்று கதைகளின் பின்னால் மௌனமாகிப் போனார்கள்.

அவர்கள் போனபிறகு, கிறீஸ்துராசாவுடன் தனிய 'கடற்கரைக்குப்' போகையில் பகிடியாய்க் கிறீஸ்துராசா கேட்டான். "நல்ல காசு..! சொந்தக்காறப் பெட்ட.. அப்ப கட்டுமன்"

யேசுதாசனிற்குச் சிறிய ஆத்திரம்; அலட்சியச் சிரிப்புத் தோன்ற "கிறீத்துராசா." எனத் தொடங்கிக் கதைத்தான்.

" சொந்தக்காறர் எப்பேர்ப்பட்ட சொந்தம். பத்துப் பன்ரெண்டு வருஷமா இவங்க எங்களோட கதைக்கிறயில்ல.; காசுச் செருக்கு. சம்பந்தமெல்லாம் தங்களப்போல காசுக் காறரோடதான்."

இப்ப காற்சட்டை போட்ட கவண்மேன்ற் மாப்பிள்ள வேணுமாம்; அதான். எங்கட்ட ஓடி வாறாங்க. இப்பயும் நாங்களில்ல... லோகம், வேலையுந்தான் அவங்களுக்குப் பெரிசு. சொந்த மெண்டாலென்ன, புறத்தியிக்கிள்ள எண்டாலென்ன நல்ல மனுசரத்தானே நாங்க, கண்டுபிடிச்சுப் பழகவேணும்"

அவனுக்குப் பழைய நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாய் நினைவுக்கு வந்தன. தவணை முடிய, 'அறுதி'க்கு வைச்ச காணியையும் வீட்டையும் விட்டு அண்ணனெண்டும் பாராமல் எழும்பச் சொன்ன மாமியும், இந்த மாமாவும். எந்தப் பெரிய சுரண்டல் நாலாயிரத்துக்கு வச்ச காணியும் வீடும்; இப்பயும் முப்பத்தையாயிரத்துக்குக் கூடப் பெறும். 'செபஸ்தியார் கோயிலடியில் ஏழைப் பறையர்களை ஏமாற்றிப் பறித்த காணித் துண்டுகள் குடியெழுப்பப்பட சாக்கினால் பந்தல்போட்டு ஒழுங்கையில், குமர்ப்பிள்ளைகளோடும் இரவையும் பகலையும் கழித்த அவர்கள்.'

'இப்பிடித்தான் இவங்க சொத்துச் சேக்கிறாங்க.'

'இந்தப் பணக்காறச் சாதியே.'

அவனுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது.

"இந்தக் காசு, ஆருக்கு வேணும்.? வெறுப்போடு சொன்னான்.

மூன்று மாதங்களிற்குப் பிறகு லீவில் ஊரிற்கு வந்திருந்தான். பப்ளிக் லைபிறறிக்குப் போய் விட்டு மத்தியானம் திருப்புகையில் முனிசிப்பாலிற்றிக் கட்டிடத்தில் நின்றபடி எமிலியூஸ் கையைக் காட்ட நின்றான். மாடியில் ஒவ்வீசில் நின்றும் இறங்கி இவனுக்குக் கிட்ட வந்தவன்.

"மாஸ்ரர். நீர் வந்ததே எனக்குத் தெரியாது. உங்கட மாமா பத்து மணி போல, தம்பி வந்திருக்கு. ஒருக்காக் கேட்டுச் சொல்லு தம்பி எண்டு அந்தரப்பிடிக்குது. அப்பதான் எனக்கு நீர் வந்து நிக்கிறது தெரியும்.."

"காலம்தான் வந்தனான்.. லைபிறறிக்கு வரயிக்க, வழியில எங்கயும் கண்டிருக்கும்." யேசுதாசன் சொன்னான்.

"ஐயோ மாஸ்ரர்.! அந்தாளோட பெரிய கரச்சல். காணுற நேரமெல்லாம் அரியண்டப்படுத்தினபடி. கனக்கப்பேர் உம்மக் கலியாணங் கேட்டு ஓடித்திரினமாம், அதான் தான் அவசரப்படுறேராம்." எனக்குப் பெரிய கரச்சலாய்ப்போச்சு.

வாற ஆத்திரத்துக்கு, அறம்புறமாய்ப் பேசிப் போடுவன்; பெரிய மனுசனாக் கிடக்கு. திரும்பத் திரும்ப வற்புறுத்தப் பட்டத்தில் எழுந்த எரிச்சல் அவனது பேச்சில் மண்டிக் கிடந்தது.

"எமிலியூஸ்.. இனிமேல்க் கேட்டா ஒண்டும் சொல்லுறேரில்ல. அவரோட இல்லாட்டி தாய் தகப்பனோட கதையுங்களன் எண்டு ஒத்தையில முடிச்சுப் போடும்"

எமலியூசுடன் கதைத்துவிட்டு வருகையில் வீட்டுக்குப் போனதும் அக்காவிடம் இது பற்றிச் சொல்ல வேணுமென நினைத்துக் கொண்டு வந்தான்.

அக்கா 'குசினிக்குள்' சமைத்தபடி இருந்தாள் அம்மா ' சின்னக் கடைக்குச்' சென்றுவிட்டதும் வசதியாய்ப் போயிற்று. எமிலியூஸ் சொன்னதையெல்லாம் சொல்லியவள்

"அவையள் இஞ்ச கலியாணங் கேட்டு வந்தவையளா?" எனக் கேட்டான்.

"ரெண்டு மூண்டு மாதத்துக்கு முன்னர் வந்து கேட்டவள். அம்மா எங்களுக்குப் புறிய மில்லயெண்டு சொல்லி விட்டிற்றா"

"இஞ்ச வந்தவையளோ.! ஆப்ப பெரிய முசுப்பாத்தியா யிருந்திருக்குமே?"

"ம். மாமியும் மாமாவும் வந்தினம். ஐயா வாசலில் நிண்டவர் வந்தவையள உள்ள வரச் சொன்னேர். கதிரையில இருந்தபடி ஒராள்ற்ற முகத்த ஒராள் பாத்தபடி இருந்தினம். ஐயா, வந்த விஷயத்தச் சொல்லுங்களன் எண்டு கேட்டேர். பிறகுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. யேசுராசா

'கலியாணங் கேட்டு வந்தனாங்க' ளெண்டு மாமி சொன்னா. ஐயா ஒண்டும் பறய இல்ல. அம்மா தான் சொன்னா அவனுக்கு இப்ப கலியாணங் கட்டுறதில விருப்பம் இல்ல' யெண்டு. 'எங்கட காசு பணமெல்லாம் அண்ணன்ர பிள்ளைக்குப் போகட்டுமெண்டுதான் வந்தனாங்க' எண்டு மாமி சொன்னா. ஐயோ. நீங்க காசுக்காறர். இவ்வளவு நாளும் இருந்தது போல உங்களப்போல ஆக்களளோட இருங்க..நாங்க ஏழ பாழையள்., எங்கோட இருந்த மனுசரோட இருக்கிறம்' எண்டு அம்மா சொன்னா. மாமாவுக்கும் மாமிக்கும் முகம் தொங்கிப் போச்சு, கொஞ்ச நேரம் ஒண்டும் பேசாம இருந்திற்று எழும்பிப் போயிற் றினம்.."

அவனுக்குத் தன் அம்மாவின் மேல் வியப்புக் கலந்த திருப்தி எழும்பியது. 'மனிசி காசப் பெரிசா மதிக்கயில்ல மனிசரத்தான் பாக்குது.' என நினைத்துக் கொண்டவனின் மனதில் மாமியின் மேலும் மாமா மீதும் வெறுப்புத் தான் பரவியது. சீ இவ்வளவு நாளும் எட்டியும் பாராதவங்க, இப்ப தங்களுக்குக் காரியம் ஆகவேணுமெண்ட உடன வந் திற்றினம், வெக்கம் ரோசம் இல்லாம. இந்தக் காசுக்காறருக்கு. சுயநலந்தான் பெரிசு.. மானம் ரோசம் இல்லாதவங்க. தங்களப் போல, காசெண்ட உடன பல்லிளிச்சுப் போடுவமெண்டு நினைச்சிற்றாங்க போல.' வெறுப்பும் ஆத்திரமும் மூள,

'என்னட்டக் கதைச்சிருக்க வேணும்; நல்லாக் குடுத்தி ருக்கலாம்' என எண்ணிக் கொண்டான்.

மத்தியானச் சாப்பாட்டிற்குப் பிறகு பஞ்சியில் நித்திரை கொண்டு எழுப்பியவள் வெளியில எங்கயாவது போக வேண்டும்போலத் தோன்ற வேட்டியை உடுத்திச் சைக்கி ளையும் எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டான்.

'வாடி' குலைந்து வெகு நேரமாகியதில் றோட்டில் நடமாட் டம் குறைந்திருந்தது.

காயப்போட்ட கருவாடுகளைக் கூடைகளில் பெண்கள் அடுக்கிக் கொண்டிருந்தார்கள்; சுருட்டுக் குடித்தபடி குந்தி இருந்த ஒரு மனிசி இவனைக் காட்டி மற்றப் 'பெண்களோடு' எதையோ கதைத்தாள்.

பார்த்தும், ஏதும் அர்த்தம் கொள்ளாதவனாய்ச் சைக்கிளில் இவன். கருவாட்டுக் கொட்டில்களைக் கடந்து ஐஸ் பக்டரி மூலையில் திரும்புகையில் புகையிலைக் கிட்டங்கிக்குக் கிட்ட ' செல்வநாயகம் மாமா' நிற்பது போலயிருந்தது. சைக்கிள் கிட்ட வருகையில் அவர்தானென நிச்சயப்படுத்திக் கொள்கையில் 'செல்வநாயகம் வலை வீசினா, ஒண்டுந் தப்பாது' என்று அவர் சொல்லிய வசனமும் நினைவில் தட்ட உதட்டில் கேலிச் சிரிப்பும் அரும்பியது.

அவரும் இவனையே பார்த்தபடி, " தம்பி. ஒரு விஷயம்." என நிற்கும்படி சைகை காட்டவும் வேணுமென்று அவரைக் கடந்தபடி சைக்கிளை நிற்பாட்டினான்.

சைக்கிளை நிற்பாட்டிய இடத்திற்கு 'வண்டி' குலுங்க சிறிய ஓட்டத்தோடு அவரும் வந்தார்.

அவன் சைக்கிளைவிட்டு இறங்காமலே இருந்தான். "தம்பி. எமிலியூஸ் எல்லாம் சொல்லியிருக்கும். உம்மட விருப்பத்தச் சொல்லுமன்."

இழுத்து இழுத்துக் கதைத்தவர் ஆவலாய் பதிலை எதிர் பார்த்தவாறு நின்றார்.

இவனது பாரவை அவர்மேல் பதிந்தது. கழுத்தைச் சுற்றித் தொங்கிய இரட்டைப் பட்டுச் சங்கிலி 'வண்டி' யின் மேல் வளைவாய் விழுந்து கிடந்தது. ஒவ்வொரு கையிலும் மூன்று விரல்களில் மோதிரங்கள் மின்னின. உப்புத் தண்ணீரில் கால்படாமலேயே 'வாடி'யிலும் வீட்டிலும் நின்றபடி சுரண்டிச் சேர்த்த காசில் கொழுத்திருந்த, ஒரு வகைமாதிரிச் சம்மாட்டி.

'இவங்கள் என்ன மனிசர் இவ்வளவு நாளும் காசு கண்ண மறச்சிட்டுது; இப்ப பெரிய அந்தரப்படுறேர்'

எண்ணங்கள் பரவுகையில் கோபமும், வெறுப்பும் எழுந்துவர பறையாமல் நின்றான்.

'துண்டல் கயிற்றை' 'மரக்கலில்' போட்டுத் தூக்கியபடி வந்த தோமாசும் அருள்சீலனும் சிரித்தபடி கடந்து சென்ற போதும், பதிலுக்குச் சுமுகமாய் அவனால் சிரிக்கவும் முடியவில்லை.

திடீரென 'இஞ்சின் போட்' ஒன்று ஸ்ரார்ட் எடுத்து தண்ணீரைக் கிழித்துச் சத்தமிட்டுச் சென்றது.

கொஞ்சத் தூரத்தில் 'விக்ரர் புட்டி' யருகில் கடலில் ஒற்றைப் பருந்து பதிவாய் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அவனுடைய மௌனத்தைச் சம்மதமென அவர் நினைத்தார் போலும். அவர் மெது மெதுவாய் முன்னேறினார்.

"தம்பி என்ர காசெல்லாம் ஏன் புறத்தியிக்குள்ள போவான். 'பிறான்சிஸ்கா'வும் உம்மட மச்சாள் தானே"

'புறத்தியிப் பெடியனெண்டா என்ர பங்கப் பிரி, அப்படியெண் டெல்லாம் சொத்துக்குக் கரச்சல் குடுப்பானெண்ட கவலை போல.'

'வீட்டயும் சரிவராது எண்டாப் போல, என்னை வளைக்க வருகினம்.

காசயும் பெட்டையையும் காட்டினா, ஒரு இளந்தாரிப் பெடியன் ஓமென்பான்தான் எண்டு, நினைச்சிற்றாங்கள் போல..' மனதுள் இந்த நினைவுகள் எழும்ப 'என்ர சுயமரியாதையே அவமதிக்கிறாங்கள்' என்ற உணர்வும் தோன்ற அடிமனதிலிருந்து மெல்ல மெல்லப் பெருகி வந்த ஆத்திரம் உடலெங்கும் பரவ , விறைப்பாய் அவரைப் பார்த்தான்.

அவனது அந்த மாறிய பார்வையை அவர், எதிர் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபதிலகை

வேயில்லை! திகைப்பாய் அவனைப் பார்த்தார்.

'பொழுது பட்டுக்' கொண்டிருந்த 'பண்ணைக்' கடற் பக்கச் செவ்வானத்தின் பின்னணியில் அவன் மேலும் அச்சமூட்டு பவனாய் அவருக்குத் தெரிந்தான். அவனுடைய ஆத்திரம் வெளிப்பாய்ந்தது.

'இஞ்சேரும் நாங்க விசரரில்ல. பத்து வருசமா திரும்பியும் பாராதவங்களோட, காசெண்டதும் பல்லக் காட்டிறதுக்கு வேற ஆராயும் பாருங்க . நாங்க மனிசரத்தான் பாக்கிறம். எங்களுக்கு மானம் ரோசம் இருக்கு; உங்களப்போல, வெக்கங்கெட்டனுங்களில்ல." சோழகத்தின் வீச்சில், 'பாலக்கட்டின்' மேலால் எழும்பியபடி அலைத்தண்ணீர் றோட்டை நனைத்து, வழிந்தது

# முடிந்த வாழ்க்கை மீள்வதில்லை



சீலன், வந்தவர்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக விடைபெற்றுக் கொள்ள, அவர்களுக்கெல்லாம் நன்றியுணர் வோடு விடை கொடுத்து விட்டு அமைதியாக சோபாவில் வந்து அமர்ந்துகொண்டார். திருமணமாகி 40 வருடங்கள் எப்படி ஓடிப் போனது என்று தெரியவில்லை. சாயம்பூசிக் கொண்டாலும் ஒட்டிக் கொள்ளாமல் தள்ளி நிற்கும் காதோரத்து வெள்ளைநிற தலைமுடியும் மார்பை விட வயிறு முன்னுக்கு துருத்திக் கொண்டு இருப்பதால் இடுப்பில் கட்டியதுணிக்கு உத்தரவாதம் இல்லை என்று அடிக்கடி பறைசாற்றிக் கொண்டு இருக்கும் உருவ அமைப்பும் அவரின் தொலைந்துபோன வயதுக்கு இன்று சாட்சியாக நிற்கிறது . அன்று அவருக்கு முப்பத்தோரு வயது களை யான தோற்றம், கலியாண சீசன், பெண் கொடுக்க நான் நீ என்ற போட்டியில் பெற்றோரும் புரோக்கர்மாரும் கூடி சாகரத்தில் மூழ்கி நல்முத் தாக தேடி சுந்தரியை மணமாகளாக கொடுத் தார்கள். அப்போது அவளுக்கு வயது 25, சீலனை விட 6வயது இளையவள்.

மாப்பிள்ளையின் உத்தியோகம், அவரின் கம்பீரமான, அளவான உயரம், சற்று பூசிய உடம்பு, சிரித்துப்பழகும் விதம், பெற்றோரை கனம் பண்ணும் தோரணை சகோதர பாசம் இவற்றை எல்லாம் பெண்வீட்டாருக்கு திருப்தியை கொடுத்தது. பெண்ணின் அழகு, தோலின்நிறம் பார்ப்பதற்கு பக்குவமாக நடந்து கொள்ளும் தன்மை, சிரித்தமுகம், தேவைக்கு அதிகமான பண வசதி பட்டதாரி ஆசிரியை, இவை மாப்பிள்ளையின் வீட்டாருக்கு மன நிறைவாக இருந்தது. பெரியோர் கள் முதலில் ஜாதகம் பொருந்த வேண்டும் என்றார் கள். அதை அடுத்து கொடுக்கல் வாங்கல்கள் பற்றிபேசி முடிவானதும் எல்லோருக்கும் தங்களின் கௌரவம், தாங்கள் தேடிய முக்கிய அம்சங்கள் என்று எல்லாம் திருப்திகரமாக இருக்க இரு வீட்டாரும் கலந்து பேசிய முடிவெடுத்த பின் மணமக்களின் சம்மதம் கேட்க நல்ல நாள் பார்த்து ஊர் அம்மன் கோவிலில் வைத்து மாப்பிள்ளையையும் பெண்ணையும் ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் செய்து வைத்து சம்மதத்தையும் பெற்று

இருவரும் திருப்தி என்ற பின் ஊரைகூட்டி கலியாணத்தை முடித்து வைத்ததில் அவர்களுக்கு இருந்த கடமை ஒன்றை நிறைவேற்றிக் கொண்டோம் என்ற பெருமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணத்துக்கு வந்தவர்கள் எல்லோரும் இருவரின் ஜோடி பொருத்தம் பற்றி வாயாராப் புகழ்ந்து தள்ளினார்கள்.

சுந்தரி இளம் வயதில் இருந்தே பெற்றோரின் கட்டுப் பாட்டில் வளர்ந்தவள். பதின்ம வயதை அடைந்தபின்பு அவளுக்குள்ளும் தானும் காதலிக்கவேண்டும் என்ற ஆசைகள், அவளது நண்பிகள் சொல்லும் கதைகளை கேட்டு வந்திருக்கிறது. இருப்பினும் காதலில் ஏமாற்றப்பட்டு கலங்கி நின்ற அவள் உயிர்த்தோழி பாமாவின் நிலை கண்டு தன்னுக்குள் தன்னைப் பூட்டிக்கொண்ட போதும் அவளின் பருவ வயது அவளை கண்ணாமூச்சி காட்டி இழுத்திருக்கிறது அப்போதெல்லாம் இவனை நம்பலாமா?அவனை நம்ப லாமா? என்று தன்னைத்தேடி வரும் வண்டுகளை நெருங்க விடாமல் வலுக்கட்டாயமாக விரட்டியடித்திருக்கிறாள். படப்படிப்பும் முடிய போராட்ட காலமும் ஓடிவிட்டது. பின் கிடைத்த ஆசிரிய தொழில், பொறுப்பு,ஒழுக்கம் , கட்டுப்பாடுகள் நிறைந்ததினால் அவளது நியமனத்துக்குப்பின் சலனத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு பெற்றோர்களின் விருப்பத்துக்கு தன்னை அற்பணித்துக் கொண்டாள்.

குறைவாக பேசுவாள்.தன்மானத்தை விட்டுக் கொடுக்க மாட்டாள். வீட்டில் அவள் அப்பாவின் செல்லப்பிள்ளை. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சிறு சிறு பூசல்கள் வரும். அடிக்கடி வாக்குவாதமும் அதை தொடர்ந்து சண்டையும் வரும் . அப்பா பாவம் எதையும் பெரிதாக அலட்டிக்கொள்ள மாட்டார் என்றும் அவள் அம்மாவில்தான் குற்றம் இருப்பதாகவும் நினைத்துக்கொள்வாள். அவள் அம்மா,அப்பாவை விட வசதியாக வளர்ந்தவள். இதை காரணம் காட்டி அம்மா கோபக்காரி,வாயாடி என்று அப்பாவின் உறவுக்காரர்கள் எல்லோரும் கணித்து வைத்து இருகிறார்கள். இதை சுந்தரியும் நம்பினாள். அம்மா எங்களுக்கோ அப்பாவுக்கோ ஒரு குறையும் இல்லாமல் தன் கடமைகளை சரிவர செய்து கொள்வாள். இருப்பினும் வீட்டில் அம்மா கண்களைக் கசக்கினாலோ,இல்லை அப்பாமேல் ஏதாவது குறை சொன்னாலோ சுந்தரிக்கு பிடிக்காது. அப்பாவை அன்பால் கட்டுப்படுத்தலாம்,அது உங்களுக்கு தெரியாதா? என்று வாதாடுவாள். அப்போ தெல்லாம் "நான் என்ன வெறும் ஜடமா?"என்று சுந்தரிமேல் அவள் அம்மா எரிந்து விழுவாள். சுந்தரிக்கு கோபப்படும் அம்மாவைப் பார்த்து சிரிப்புதான் வரும். இவை எல்லாம் சுந்தரி திருமணம் ஆகி நான்கு வருடங்களில் அவளுக்கு குழந்தைகள் இரண்டு பிறந்த பின்பு புரியாத புதிராக இருந்தவை மெல்ல மெல்ல புரியத் தொடங்கியது.

சீலனின் குணங்களும் அவளின் அப்பாவை போல்தான் இருக்கும். எல்லோருக்கும் நல்லவன். சகோதரர்கள் எது கேட்டாலும் இல்லை என்று சொல்ல மாட்டான். சில வேலைகளில் அவனது குணங்களில் அவளின் அப்பாவின் சாயல் கலந்து இருக்கும். சீலனின் சம்பளத்தில் இன்றும் அவர் சகோதர சகோதரிகள் பங்கு போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இதையிட்டு ஆரம்பத்தில் சுந்தரி கண்டும் காணாது போல்தான் இருந்தாள். வருடங்கள் ஆக ஆக அவர்களின் தேவைகளும் பெருத்துக்கொண்டு வந்ததினால் சிறிது கட்டுப்படுத்த தொடங்கினாள்.

"உங்கள் அம்மா அப்பாவுக்கு கொடுங்கள் அது உங்கள் கடமை ஆனால் விவாகமாகிப் போன உங்கள் சகோதர சகோதரிகளுக்கு கொடுக்க தேவையில்லை. அவர்களும் உழைக்கிறார்கள்.அவர்களின் வருமானத்துக்குள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவையானதை அவர்களே செய்ய விடுங்கள். நீங்கள் இப்படி செய்து காட்டினால் அவர்களும் அவசியமற்ற செலவுகளை அவசியமாக்கி கொள்வார்கள் சிறிய தேவைகளை அவர்களே பார்த்துக் கொள்ளட்டும், பெரிய தேவைகள் வரும்போது நாங்கள் உதவி செய்யலாம்"

என்று சிறு தடை போட்டதும்,அன்று தொடக்கம் சீலன் கொடுப்பதை சுந்தரிக்கு தெரியாமலேயே கொடுக்க தொடங்கி விட்டான். அவர்களும் சுந்தரிக்கு தெரியாமலேயே வாங்க தொடங்கி விட்டார்கள்.இதனால் அவர்களும் சுந்தரியுடன் 'ஓடும்புளியம்பழமும்' போல் நடந்து கொண்டார்கள். சீலனும் மெல்ல மெல்ல பொய் ஒளிவு மறைவு என்ற புதருக்குள் தன்னை ஒளித்துக்கொண்டதினால் சுந்தரியோடு மனம் விட்டுப் பேசுவதையும் குறைத்துக் கொண்டான் . சுந்தரியின் சம்பளம் வரவுசெலவுகளைப் பற்றி அவன் கேட்டால் அவள் தன் வரவு செலவுகளைப் பற்றி தன்னிடம் கேட்பாள் என்பதினால் தள்ளியே நின்றதினால் குடும்பத்தில் ஒட்டுறவு குறைய தொடங்கியது. தன் வீட்டாரில் காட்டும் அக்கறையை தன் மனைவி பிள்ளைகள் மேல் காட்ட சீலனாலும் முடியவில்லை. சுந்தரி குடும்பம் தன் குடும்பத்தை விட பணக்காரக் குடும்பம் என்ற தாழ்வு மனப்பான்மை காரணமாக இருவருக்கும் இடையே ஒரு நூலாக மெல்லிய கோடு உருவாக தொடங்கியது. இந்த வெடிப்பை பயன்படுத்தக் கூடியவர்கள் தங்களுக்கு சாதாகமாகிக் கொண்டார்கள். இதை உணர்ந்த சுந்தரி சமாதானமாக வாழவேண்டும் என்று விரும்பினாள். இப்பொழுது தான் தன்அம்மாவின் கண்ணீருக்கும் குடும்ப பூசலுக்கும் அர்த்தம் புரியத் தொடங்கியது. தான் தன் அம்மாவுக்கு எதை சொன்னாளோ அந்த அன்பால் அவனைக் கட்டுக்குள் கொண்டுவர முற்பட்டாள். அது மிகவும் கடினமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபதிலகை

"திருமணம் என்பது இருமனம் கலப்பதினால் உருவாக வேண்டும். இருமனங்களுக்கும் இடையே ஒளிவு மறைவு இருக்க கூடாது. இரு வேறுபட்ட குடும்பத்தில் பிறந்து வெவ்வேறு பட்ட சூழ்நிலையில் வளர்ந்தவர்கள் இணைந்து வாழ முடிவெடுக்கும்போது இருவருக்குமிடையே விசுவாசமும் அன்பும் நம்பிக்கையும் அரணாக கட்டி எழுப்பப்படவேணடும். அதன் வகிபாகம் சமமாக இருக்கவேண்டும். இவற்றைமீறி கொள்ளும் உறவும் விபச்சாரத்துக்கு சமம்" என்பது சுந்தரியின் வாதம். இதை எந்த வகையில் புரிய வைக்க முடியுமோ அந்த வழிகளை எல்லாம் பொறுமையாக விளக்க முற்பட்டாள்.

ஆசிரியப்பணியின் அர்த்தம் புரிந்து கொள்ளாதவர்கள் ,ஆசிரியப்பணியில் இருப்பவர்களுக்கு விடுமுறை நாட்கள் அதிகம் என்பார்கள். ஆனால் விடுமுறை நாட்களிலும் ஓயாது கண் விழித்து தம்மைத்தாமே தயார்படுத்திக் கொண்டால்தான் நல்ல மாணவர்களை உருவாக்க முடியும். இப்படிப்பட்ட வேலைப்பளுவை சுமந்துகொண்டு இருக்கும் சுந்தரிக்கு தன் கணவனையும் ஒரு மாணவனாக உருவகித்து கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்து அன்பு காட்டிடவேண்டிய நேரத்தில் அன்பைக்காட்டி ஒரு நல்ல கணவனாக்க முனையும்போது அங்கே சுந்தரி அவன் கண்ணுக்கு மனைவியாக இல்லாமல் ஒரு கண்டிப்பு நிறைந்த ஆசிரியையாகவே காணப்பட்டாள். அன்பு சுருங்க முகம் கொடுத்து பேசும் நேரமும் அருகிவிட இருவருக்கும் இடையில் உள்ள இடைவெளியும் நீளமானது

அவள் வீட்டின் எதிர் வீட்டில் கேசவன் என்ற ஆட்டோ ஓட்டினர் மனைவி தன் இரண்டு குழந்தைகளோடு வசித்து வருகிறார். அவர்களின் வீடு,ஒரு அறை, சமையல் அறை,முன் பக்கமாக ஒரு விராந்தை அதையொட்டி வீட்டோடு இணைந்த முன் சாரளம். அவர்களின் வருமானத்துக்கு ஏற்ப ஒரு சிறிய வாடகை வீடு. காலை உணவை முடித்துக்கொண்டு தன் பிள்ளைகளை தன் ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு போய் அவர்களின் பாடசாலையில் விட்டுவிட்டு பத்து மணிவரை தான் உழைத்த காசில் வீட்டுக்கு மீன்,காய்கறிகள் வாங்கி வந்து மனைவியிடம் கொடுத்துவிட்டுப் போய் தன் உழைப்பை பார்த்து விட்டு மதியம் இரண்டு மணிக்கு மீண்டும் பிள்ளைகளை வீட்டுக்கு கூட்டி வந்து அவர்களோடு மதிய உணவு உண்ட பின்பும் மீண்டும் போய் ஆட்டோ ஓட்டப் போய் விடுவான். பின்ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்து குளித்துவிட்டு சுத்தமான உடை உடுத்திக்கொண்டு தயாராக இருக்கும் மனைவி பிள்ளைகளையும் ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு கோவில், கடை ,சினிமா என்று இரண்டு மணித்தியாலம் சந்தோசமாக பொழுதை போக்கிவிட்டு வந்து சாப்பிட்டுவிட்டு கலகலப்பாக தூங்க போய்விடுவார்கள். இந்த குடும்பத்தை பார்த்து சுந்தரி மனதில் ஒரு வித ஏக்கம் வந்தாலும் அவர்களின் வாழ்க்கை முறையைப் பார்த்து சந்தோசப்படுவாள். தங்களுக்கு இருக்கும் வசதிகளில் குறைந்த பட்சம் இரண்டு வீதம் கூட அவர்களிடம் இல்லை. அவர்களிடம் இருக்கும் சந்தோசத்தின் இரண்டு வீதம் கூட தங்களிடம் இல்லை என்ற கவலை அவள் மனதை வாட்டும்.

அன்று சனிக்கிழமை சீலன் மதிய நேர உணவுக்குப்பின் தொலைக்காட்சியில் படம் பார்த்துக்கொண்டு இருந்தான். சுந்தரி வழமைபோல் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தவள், தன் கணவனை தன்னருகே வரும்படி அழைத்தாள். சீலன் சலிப்போடு எழுந்து வந்து என்ன? என்று கேட்டான். "அங்கே பாருங்கோ கேசவன் தான் சாப்பிடுவதற்கு முன்பு தன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் தன் உணவுத்தட்டில் இருந்து எடுத்து அவர்களுக்கு ஊட்டி விட்டுவிட்டு தானும் சாப்பிடுகிறான். எவ்வளவு சந்தோசமான குடும்பம். எங்களிடம் எவ்வளவு பணம் இருந்தும் இப்படி சந்தோசமாக எங்களால் வாழமுடியவில்லை.'' என்று சொல்லி முடிப்பதற்குள்

"நீ அப்படி வாழ ஆசைப்பட்டால் அந்த 'ஆட்டோ றைவர் கேசவனை' கல்யாணம் செய்து இருக்க வேண்டும். இந்த எக்கவுண்டன் சீலனை அல்ல" இந்த சொல் சுந்தரியின் காதில் கொதிக்கும் ஈயத்தை ஊற்றியது போல் இருந்தது. அவள் துடித்துப்போனாள். அந்த சொற்களில் இருந்து அவள் தன் கணவன் சீலன் ஒரு தாழ்வு மனப்பான்மை கொண்ட,தான் சொல்வதை காதுகொடுத்து கேட்க விரும்பாத போட்டியாளனாக மாறி இருப்பதை உணர்ந்து கொண்டாள். அன்றில் இருந்து தான் ஏமாற்றுப்பட்டவள் போல் உணர்ந்தாள். அவர்களுக்கு இடையில் இருந்த கோடு பாதையாக மாறி பெரும் நெடுஞ்சாலையாக உருவெடுத்தது. அன்று தொட்டு உலகுக்கு ஒற்றுமையான குடும்பம் போல் இருவரும் காட்டிக்கொண்டாலும் தனி அறையில் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வதில்லை. காலப்போக்கில் சீலன் தான் விட்ட பிழைகளை உணர்ந்து கொண்டாலும் அவளை நெருங்கி வந்து சமாதானப்படுத்த முடியவில்லை. அவனால் தன்னை ஆட்டோ றைவர் கேசவனோடு இணைத்துப் பேசியதை மறக்கவோ மன்னிக்கவோ முடியவில்லை. இருவருக்கும் இடையே 'ஈகோ'புகுந்து சிம்மாசனம் போட்டு அமர்ந்து கொண்டு காலங்கள் பல வருடங்களை விழுங்கிக் கொண்டது. தன்னை நம்பி அக்கினியை சாட்சி வைத்து தன்னோடு இணைந்து கொண்டவள் இன்று அதே அக்கினியில் சங்கமம் ஆகிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்சீயே.பரீட்

காலையில் கலகலப்பாக தொடங்கிய சந்தை மாலையில் வெறிச்சோடி கிடப்பது போல்அவரது நிலை காணப்பட்டது. எங்கேயாவது தனியாக போய் இருந்து மனம் விட்டு அழவேண்டும்போல் தோன்றியது. ஜிப்பாவை மாட்டிக் கொண்டு வெளியே புறப்பட்டு வந்து, வாசலில் நின்ற தன் கார்ஐ நோக்கி போனவரின் வாடிய முகத்தையும் தள்ளாடும் நடையையும் கவனித்து "வாங்க சார் எங்கே போகவேண்டும் ஆட்டோவில் ஏறுங்கள்" என்று அழைத்தான் ஆட்டோ ரைவர் கேசவன். சீலனால் கேசவனின் முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. அவனின் அழைப்பையும் அவரால் நிராகரிக்கவும் முடியவில்லை. குற்ற உணர்வோடு குனிந்த தலை நிமிராமல் இயந்திரம் போல் கேசவனின் ஆட்டோவில் எறிக்கொண்டார்.

# மிஸ்..யூ..டடா

தனது இளையமகனை வழியனுப்பிவிட்டு பொங்கிஎழுந்த அழுகையுடன் கன்னத்தால் வழிந்தோடும் கண்ணீரைக்கூட அடக்க முடியாமல் வாடகை வாகனத்தில் ஏறிக்கொள்கிறேன். இனி நானும் மனைவியும் வீட்டில் ஆளையாள் பார்த்துக்கொண்டு சோகங்களை சுமந்தவர் களாக நாட்களை கணக்கிட வேண்டியதுதான்.

என்ன வாழ்க்கை இது.. எனது ஒரே ஒரு மகளும் கண்காணாத நாட்டில் பிள்ளைகுட்டிகளுடன் ...ஊரில் நல்லதோ கெட்டதோ "வாட்சப்" மூலம் அறிந்து கொள்ள வேண்டிய நிலமை, தொலைத்தொடர்புகள் கைவிரித்தால் யாரிடம் போய்முறையிடுவது,

மலைநாட்டின் ரம்மியமான காட்சிகளும்,உடலை வருடிச்செல்லும் குளிர்மையான காற்றும் ரசிக்கவோ உணரவோ முடியாதவனாய் பக்கத்தில் வெறுமை யாகக்கிடக்கும் மகன் அமர்ந்து வந்த அந்த இருப்பிடத்தை நோக்கி என்னைஅறியாமலேஎன்கண்கள் மொய்த்துக் கொள்கின்றது, ஈரமாகிப்போன கன்னங்களை,மனைவிக்கு தெரியாமல் துடைத்துக்கொள்கிறேன். இந்நேரம் மகன் வானத்தில் பறந்துகொண்டிருப்பான். எனது நினைவுகளோ லண்டனில் இருக்கும் மகள்,பேரப்பிள்ளைகளை நோக்கி தொற்றிக்கொள்கிறது .

நேற்றுப்போல் இருக்கின்றது நாட்டைவிட்டு சென்ற அந்த மூன்றுவருடங்கள்,குறைந்தது இரண்டு தடவைகளாவது நாட்டுக்கு அவர்களால் வந்துபோ யிருக்கலாம் யார் செய்த தவறோ கொறோனா என்றும் லொக்டவுன் என்றும் வருடங்களை கடந்துவிட்டன . இந்த வருடமாவது வருவார்களா என்றால் மின்சாரத் துண்டிப்பு ஒரு புறம் விலையேற்றம் என்றாலும் பறவா யில்லை அடுத்த வேளைக்கு என்ன வாங்கலாம் எப்படி சமைக்கலாம் என்ற நிலைமை ஒரு புறம் , கேஸ் இல்லை சமையலுக்கு அரிசி இல்லை , விடிந்தால் கேஸ்போஎினா பெற்றோல் போஎினா இப்படியான நிலைமையில் அவர்கள் வந்துதான் என்ன செய்வது. நாட்டுக்கு வருவதற்காய் தயார் படுத்திய விமானசீட்டைகூட ரத்துசெய்ததாக சென்றகிழமை பேரன் குறுஞ்செய்தி அனுப்பியிருந்தான்.

ஏதோ புரியவில்லை தினமும் பேரப்பிள்ளை களுடன் பேசவேண்டும் , வாரம் ஒரு முறையாவது "வாட்சப் " பில் அவர்களின் முகத்தையாவது பார்க்க வேண்டும் அல்லது மனைவி பேசும்போது கேட்டுக்கொண்டு இருக்கவேண்டும் என்ற உணர்வு உடம்போடு ஒட்டி விட்டது,சில வேளைகளில் தொடர்பு கொள்ளமு



டியாவிட்டால் ஏதோ என்னமோ என்று மனமெல்லாம் அன்றய நாளே இருப்புகொள்ளமல் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்சீயே.பரீட்

தொலைபேசி திரையில் எனது முகத்தை பார்த்தாலே போதும் "டடா.. டடா.."என்று பேரப்பிள்ளைகள் வாய் நிறைய சொல்லுவார்கள். டடா இல்லை அப்பா என்று சொல்லவேண்டும் என்றால் ...கேட்டால்தானே... தினமும் மகள் அப்படி என்னை அழைக்கும்போது விபரம் தெரியாத பேரப்பிள்ளைகளும் அவ்வாறே பழகிவிட்டார்கள் இருந்தபோதும் விபரம் தெரிந்த ஆண்டு எட்டில் படித்து கொண்டிருக்கும் மூத்த பேரனாவது அப்பா என்று அழைப்பானா என்றால் ...ம். ஹூம். அவன்தான் முதலில் "ஹாய் டடா" என்பான் அப்படி அழைப்பதே அவர்களுக்கு ஒரு சந்தோசம்போலும்,,ஆனால் வாப்பாவை வாப்பா என்று தான் வாய் நிறைய சொல்வார்கள்.

அதிகாலை வேளை மகனை வழியனுப்பிவிட்டு மதியமாகியும் இன்னும் ஊர் வந்து சேரவில்லை. ஹசலக்க தாண்டி மதிய சாப்பாட்டுக்காய் ஹோட்டலை நெருங்கிய போது "உம்மா நான் கட்டார் விமான நிலயத்தை அடைந்து விட்டேன் நீங்கள் ..." மகன் உம்மாவிடம் பேசிவிட்டு என்னிடம் "இந்தாங்க மகன் பேசுது" என்று மனைவி தொலைபேசியை கையளித்தாள் சில வினாடிகள் வார்த்தைகள் வராமல் தடுமாறிக்கொண்டிருந்தேன். "மகன்...." மேற்கொண்டு என்னால் பேசமுடியவில்லை "டடா..டடா .." என்ற அவனது அழைப்பிற்கு பதில் சொல்லமுடியாமல் மௌனமாகிவிட்டேன் "மகன் டடாவை தெரியும்தானே சின்ன கவலை என்றாலும் தாங்கமாட்டார் சரி மகன் ஊருக்கு போன உடன் கதைக்கிறம்" என்று சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்து விடுகிறாள்,

சில வினாடிகள் என்கண்கள் இருண்டுவிட்டதான ஒரு உணர்வு. மயக்கமா சோர்வா என்று எனக்கு எதுவுமே புரியவில்லை. கண்களை இறுக மூடிக்கொள்கிறேன்,

"சாருக்கு கவலை என்றால் தாங்க மாட்டாங்கபோல" சாரதி எனது மனைவியோடு கதைப்பது எனக்கு நன்றாக கேட்கின்றது ஆனால்..கண்களை திறக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருப்பதை மனைவி கண்டிருக்க வேண்டும் "நேற்றிலிருந்து தூக்கமில்லை தானே அதுதான் அப்படியே கொஞ்சநேரம் தூங்கினால்எல்லாம்சரியாகிடும்" என்றாள், என்னால் கண்களை சுயமாக திறக்கமுடியாமல் இருக்கிறதே என்று சொல்வதற்கு நினைக்கின்றேன் ஆனால் பேசமுடியாமல் தடுமாற்றமடைகிறேன்"

"அம்பாரைக்கு வந்துவிட்டோம். இனி வீடு வந்தமாதிரிதான்" சாரதி சொல்வது எனக்கு கேட்கின்றது,

"இறங்கிட்டு வாங்க தூங்கினது போதும் வீடு வந்து சேர்ந்திட்டம்" மனைவி அழைப்பது கேட்கின்றது, என்னால் ஒரு எட்டுகூட எடுத்து வைக்க முடியாமலும் பதிலுக்கு பேசமுடியாமலும் தடுமாறுவதை அவள் புரிந்திருக்க வேண்டும் அவளின் கைத்தாங்கலில் இறக்கிவிடப்படுகிறேன்

"ஊரில நடக்காததா நடந்திட்டு எத்தனையோபேர் உள்ளதும் ஒரே ஒரு பிள்ளைய வெளிநாட்டுக்குஅனுப்பிட்டு எதுவித கவலையும் இல்லாம சந்தோசமா இருக்காங்க நீங்க என்னடாண்டா மகனையும் மகளையும் நினைச்சி நினைச்சி கவலப்பட்டுக்கொண்டே இருக்கிங்க.. அவங்களும் வாழத்தானே வேண்டும் எப்போதும் நம்மட பாதுகாப்பிலதான் இருக்க முடியுமா என்ன..நாம வாழ்ந்தவங்க அதுகள்வாழவேண்டியவைகள் அதுகள அதுகள்ற பாட்டில விட்டிடனும் "எனது கன்னத்தால் வழிந்தோடும் கண்ணீர் துளிகளை மனைவி தனது கரங்களால் அகற்றிவிடுகின்றாள். சற்றுநேரம் அவள் மடியில் சாய்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். பிரயாணக்களைப்பில் அவளுக்கும் தூக்கம் வந்துவிட்டதுபோலும் தலையனையில் என்னை தூங்கவைத்துவிட்டு பக்கத்தில் தரையில் தூங்கி விடுகிறாள்.

என்னால் சுயமாக இயங்கமுடியாத கட்டத்திற்கு சென்று விட்டதுபோண்ற ஒரு நிலைமைக்கு அகப்பட்டுக் கொள்கிறேன் ... இமைகளைச் சரியாகத் திறக்கவோ, நினைக்கின்ற வார்த்தைகளை வாய்விட்டு கூறவோ முடியாமல் ..நான் நானாக இல்லாமல்...

"சரியாக யோசிக்கிறார்போல ..."

"ஒரே ஒரு மகளும் வெளிநாட்டில இப்போ உதவிக்கு வீட்டோடு இருந்த மகனும் வெளிநாட்டிற்கு போய் விட்டான் கடைசி காலத்தில பக்கத்தில பெற்றதுகள் இல்லையே அதுதான்...அடிக்கடி கவலைப்பட்டுக் கொள்ளுவார்"

என்னை நலம் விசாரிக்க வருபவர்கள் வினவுவதும் மனைவியின் அந்த பதிலும் என்மனதிற்குள் ஆத்திரத்தை ஏற்படுத்தும். எனது இந்த நிலைகண்டு உடன் நாட்டுக்கு வர முடியாத எனது மூத்த மகளும் இளையமகனும்" வாட்சப்"பில்அழுவதும் அவர் அவளுடன் ஒரு வார்த்தை கூட பேசமுடியாமலும், அவர்களின் முகத்தைகூட தெளிவாக பார்க்கமுடியாமலும் அவர்களின் குரலுக்கு கண்ணீரை வடித்தபடியே நாட்கள் வாரங்களாக நகர்ந்து கொண்டிருக்கின்றது,

நாளையோ மறுதினமோ என் மூச்சுகூட அடங்கிப் போகலாம்..அப்போது எனது மகளின் இளைய மகன் "மிஸ் யூ டடா"..என்று முகநூலிலோ,வாட்சப் பிலோ எனது பழைய புகைப்படதிற்கு "கொமண்ஸ்"எழுதக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. யோகராசா



# மஞ்சரி சிறுகதைகள்

## ஒரு பார்வை

செ. யோகராசா

மஞ்சரி 27

### ஆறுவது சினம் - சியாமளா யோகேஸ்வரன்

இச்சிறுகதையின் தலைப்பே 'கரு' என்னவென்பதைப் புலப்படுத்துகின்றது. எனினும் சிறுகதையின் தலைப்பு அவ்வாறமையக்கூடாது ( பாரம்பரியமான கதை எனில் அவ்வாறமையலாம் ). வாசகரது ஈர்ப்பை சிதறடித்துவிடுமென்பதாலும், பழைய 'கதை' மரபினை நினைவூட்டுமென்பதாலும் அதனை விமர்சகரெவரும் விரும்புவதில்லை. தமிழ்க்குடும்பங்களில் நீண்ட காலமாக நிலவிவரும் ஆணாதிக்கத்தின் விபரீதம் இச் சிறுகதையில் பொருத்தமுன் வெளிப்பட்டிருந்தாலும் மேன்மேலும் திருத்தி எடுத்தப்படுவதும் நீட்சியைக் குறைப்பதும் மிகவும் விரும்பத்தக்கது.

### செல்வாக்கு - சண் வேல்

சிறுகதையின் கருவும் களமும் முற்றிலும் புதியன பாராட்டிற்குரியன. முடிவும் 'முடிவில்லா' முடிவு போலமைந்து கவனத்திற்குரியதாகின்றது. இச்சிறுகதையில் தலைப்பையும் கட்டுரைத் தலைப்புமாதிரி இடாமல் மெருகுபடுத்தியிருக்கலாம்.

### வயோதிபர் சங்கம் - சூசை எட்வேட்

இதுவும் வித்தியாச கரு, களமும் புதிது. சிறுகதையின் சட்டமும் இயல்பாக அமைந்துள்ளது. முடிவில் இடம் பெற்றுள்ள 'கூட்டம் இனிது நிறைவேறியது' என்ற வசனத்தைத் தவிர்த்திருக்கலாம். 'செத்ததுக்குப்பிறகு.. உதவி செய்ய வேண்டும்' என்ற கூற்றின் வீச்சு இவ் வசனத்தினால் தளர்ச்சியடைகிறது. புாராட்டிற்குரிய சிறுகதையாயினும் மேலும் மெருகுபடுத்த வாய்ப்புள்ளது.

### கெற்றப்போல் - க. செந்தூரன்

இச்சிறுகதையின் கரு, களம் என்பனவும் வித்தியாசமானவை என்ற விதத்தில் கவனத்திற்குரிய படைப்பாகின்றது. இச்சிறுகதையின் முடிவிலுள்ள யாரும் சொல்லாமலே என்தவறு எனக்குப் புரிந்தது என்ற வசனத்தையும் தவிர்த்திருக்கலாமே! ( தலைப்பு 'பிறமொழிச் சொல்' என்பதை வெளிப்படுத்த ஒற்றை மேற்கோள் அடையாளம் போட்டிருக்க வேண்டும். வாசகர் சிலர் அநாவசியமாக குழம்புவதைத் தவிர்க்க).

### பங்கர் - நிலவந்தன்

போர்க்காலத்து இறுதிநாள்களில் நிகழ்ந்த சம்பவமொன்று பற்றிய நுண்மையான சித்திரிப்பு 'கந்தசாமி' என்ற சித்திரம் மேன்மேலும் தீட்டப்பட்டிருக்கவேண்டும். "அதுதானே கந்தசாமிக்கு எவ்வளவு தாராள மனசு பாத்தியளே" என்பது யார் கூற்று? அக்கூற்று இடம்பெறத் தேவையுமில்லை. கதையினை அது சிதறடித்துள்ளது. மனிதம் பற்றிய உணர்வு இன்னும் செதுக்கப்பட்டிருப்பின் நந்தினி சேவியரின் 'மனிதம்' சிறுகதை போல் இன்னொரு சிறந்த படைப்பாகியிருக்குமல்லவா?

### தொலைந்து போன மனிதன் - அகரா

'பழைய விடயம்' எனில் புதிது போல் எழுதப்படவேண்டுமென்பர். சமூகத்தை விட்டுத் தொலைந்து போயிருந்த மனிதர். அவர் பற்றிய சித்தரிப்பு முறைமையில் உயிர்த்துவமில்லாமல் அவர் வாசகரிடமிருந்தும் தொலைந்து போயுள்ளார் என்ற எண்ணமே வாசிப்பின் முடிவில் மேலோங்கியுள்ளது. பலதடவை செதுக்கப்பட வேண்டிய சிற்பம்.

### கோடை மழை - அ. முத்துலிங்கம்

அ.முத்துலிங்கத்தின் ஆரம்ப காலத்துச்சிறுகதையென்றாலும் இக்கால முத்துலிங்கத்தை அன்றே தரிசிக்க முடிகின்றது. யாழ்ப்பாணச் சமூகத்தின் அழுக்கொன்றினை 'வேலி' (கே. வி.நடராஜன்) சிறப்பாகப் பதிவு செய்திருப்பது போன்றே இன்னொரு கோணத்தில் இச்சிறுகதை அதனை வெளிப்படுத்தியுள்ளது. இன்றைய வாசகருக்கு புதிய அனுபவம். சிறந்த தெரிவு

### மேலதிக குறிப்பு

ஆசிரியத்தலையங்கம் வழமைபோன்று மு. தயாளனின் அரசியல் முதிர்ச்சியின் இன்னொரு அறுவடை.

ஆ.சபாரத்தினம், திரு தனபாலசிங்கம் முதலானோரின் நூல் வரிசையில் ஒரு காலத்தில் இத் தொகுப்பும் அமைவது நிச்சயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கட்டுரை

மு.தயாளன்



# சிறுகதை எழுதுவது எப்படி?

## எப்படி ஆரம்பிப்பது?

ஒரு கதையை ஆரம்பிப்பதற்கு பல வழிகள் உண்டாயினும் என்னுடைய அனுபவத்தில் கேள்வி கேட்பது சிறந்த உத்தியாக இருக்கும் என் நினைக்கிறேன். அதாவது ' இது நடந்தால் என்ன நடக்கும்?' இந்தக் கேள்வி உங்கள் மனதில் இருக்கும் கருவை வழிநடத்திச் செல்ல வழிவகுக்கும்.

உங்களிடம் நல்லதொரு கரு இருப்பதாக வைத்துக் கொள்வோம். இப்போ உங்கள் முன்னுள்ள பிரச்சினை எங்கே ஆரம்பிப்பது. ஆரம்பம் சிறுகதைக்கு மிக முக்கிய மானது. ஆரம்பம்தான் வாசகனை வாசிக்க வைக்கத் தூண்டுகிறது. ஆரம்பம் முக்கியமாக இருந்தாலும் பாத்திர வார்ப்பும் தெரிந்தெடுக்கும் பாத்திரங்களும் மிக முக்கியமானவைதான்.

உங்களுடைய கரு மக்களின் வாழ்க்கையோடு ஒன்றியதாக இருக்கவேண்டும். உங்களின் கதையைப் படிக்கும்போது அந்தப் பாத்திரங்களோடு வாசகன் தன்னைப் பொருத்திப் பார்த்து மகிழவேண்டும். பாத்திரங்களில் முக்கியமாக முதன்மைப் பாத்திரத்தினிடம் ஒரு நெகிழ்வுத் தன்மை இருக்கவேண்டும். ஆரம்பம் எவ்வளவு முக்கியமாக இருந்ததோ அவ்வளவுக்கு முடிவும் முக்கியமானதாக இருக்கவேண்டும். முடிவு வாசகனுக்கொரு உந்து சக்தியாக இருக்கவேண்டும்.

நீங்கள் எடுக்கின்ற கரு நீண்டகாலத்திற்கு முந்தி நடந்ததாக இருக்கக் கூடாது. அப்படி இருப்பின் அது வாசகனுக்குச் சலிப்பை ஏற்படுத்தும். எழுதத் தொடங்கும் காலத்திலிருந்து மிகச் சமீபமாக நடந்த ஒரு பிரச்சினை அல்லது சம்பவமாக இருத்தல் நன்று.

வெற்றியடைந்த பல எழுத்தாளர்களின் வெற்றியடைந்த பல கதைகளில் முதன்மைப் பாத்திரங்களாக அவர்களே இருந்திருக்கிறார்கள். இப்படி நான் சொல்வதால் அப்படித்தான் இருக்கவேண்டுமென்பதில்லை. ஒரு உதாரணத்திற்காககே கூறினேன்.

பொதுவான சம்பவங்களையும் எடுத்தாளலாம். காதல் என்பதை எடுத்துப்பாருங்கள். இது பரவலாக நடைபெறுகின்ற ஒன்று. இந்தக் காதல் பல பிரச்சினைகளைத் தாண்டித்தான் வெற்றி அடைகிறது. இந்தப் பிரச்சினைகளில் ஒன்றை எடுத்து உங்கள் பாணியில் சிந்தியுங்கள். அந்தப் பிரச்சினைகளுக்கு உங்கள் பாணியில் முடிவை வழங்குங்கள். இந்த இதழில் யன்னல் என்றொரு கதை வந்துள்ளது. அதனை உன்னிப்பாக வாசித்துப் பாருங்கள்.

அதன் ஆரம்பம்

**அது நீர்கொழும்பின் நிச்சலனமிக்க தெருக்களில் ஒன்று. அந்த மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் சட்டென விரைந்தாள் ஹமீதா. ஜன்னல் திரையை மெல்ல விலக்கினாள்.** ... இந்த ஆரம்பம் ஒரு ஆர்வத்தை வாசகர் மனதில் ஏற்ப டுத்துவதை அவதானிக்க வேண்டும். அடுத்து என்ன ? என்ற கேள்வி தானாகவே எழுகிறது. ஒரு பக்கத்தில் எழுதப்பட்ட சிறுகதைதான் இது. மிகப் பெரிய சமூகப் பெறுமதியை இது கொண்டிருக்காவிட்டாலும் மனித சமூகத்திற்கு ஒரு செய்தியை மிக அழகாகச் சொல்கிறது. அதன் முடிவு யாரும் எதிர்பாராத ஒன்று.

**.....மெல்லிய தாடிக்குள் அந்தப் பெண்ணின் ஜாடை மெலிதாகத் தெரிந்திட, அவள் தந்து சென்ற புன்னகை ஹமீதாவின் மனதை கீறிக்கொண்டிருந்தது.**

இப்படி முடிகிறது அந்தக் கதை. தெளிவான முடிவு. இதனை ஒரு தரம் இல்லையில்லை மூன்றுதரம் படித்துப்பாருங்கள். ஆர்வம் நிறைந்த ஆரம்பம் - கதையின் நகர்வு - தேவையான வசனங்கள் - வாசகர் மனதில் எழும் வினாக்கள் - வாசகர் எதிர்பார்க்காத முடிவு - கதை மொத்தத்தில் சமூகத்திற்குக் கூறும் செய்தி. இந்தக் கதையை மனால் என்பவர் எழுதி அனுப்பியிருந்தார்.

இது ஒரு உதாரணம்தான். இப்படிப் பல உதாரணங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் உங்களோடு கதைப்பதுதான் என் நோக்கம்.

கதைக்கான கருவை தேடிச் செல்லாதீர்கள். அது உங்களுக்கு அருகில் அல்லது உங்கள் வாழ்க்கையில் தான் இருக்கிறது. சமூகத்தை அவதானத்தோடு எப்பொழுதும் உற்றுப் பார்த்துக் கொண்டேயிருங்கள். உங்கள் கடமை எப்பொழுதும் சமூகத்திற்குத் தேவையான செய்திகளை வழங்குவதேயாகும்.

அடுத்த தடவை இன்னுமொரு உதாரணத்தோடு உங்கள்முன் வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. Kugan
72, 2nd Lane
Anandapuri
Trinco

LUXMI
EDUCATION CENTRE
# LEC



# ENROLLING NOW
## 2022 / 2023

**REGISTER NOW**

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

# WESTERN
## JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

**SPECIALISED IN 22ct GOLD, WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY**

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

## SILK EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org